# மல்லிகை

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

1993 மார்ச் — விலை ரூபா 10/-



பிலிப் நீக்கிலஸ்

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

# RANI GRINDING MILLS

219, MAIN STREET,

**MATALE**

SRI LANKA

PHONE: 066-2425

★

★

★

# VIJAYA GENERAL STORES

**(AGRO SERVICE CENTRE)**

DEALERS: AGRO CHEMICALS, SPRAYERS,
FERTILIZER & VEGETABLE SEEDS

**No. 85, Sri Ratnajothy Sarawanamuthu Mawatha.**
**(Wolfendhal Street,) COLOMBO-13.**

PHONE: 27011

மல்லிகை

''ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினையகலைகளில், உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்''

'Mallikai' Progressive Monthly Magazine

239

மார்ச் — 1993

# 28-வது ஆண்டு

## உங்களது ஆசிர்வாதம் பலிக்கின்றது.

வேறெந்தக் காலத்தையும் விட இப்பொழுது வீதிகளில் — வழிகளில் — காணும் அன்பர்கள் பலர் என் மீது தனியாகவே அன்பு செலுத்துவதையும் மரியாதை காட்டுவதையும் அவதானித்து வருகின்றேன்.

சைக்கிளில் வரும் சில சுவைஞர்கள் இருக்கையை விட்டு இறங்கி என்னைப் பாராட்டிவிட்டுப் போகின்றனர். சிலர் வாய்விட்டே வாழ்த்துகின்றனர்.

எனக்குச் சில சமயங்களில் தர்ம சங்கடமாக இருக்கின்றது; சில நேரங்களில் தேகம் புல்லரிக்கின்றது. வேறு சில சமயங்களிலோ பயமாகவும் இருக்கின்றது.

இந்த மண் என்னிடம் ஏதோ பெரிதாக எதிர்பார்க்கின்றது என்பதை நான் இத்தகைய செயல்பாடுகளினால் மனசார உணர்ந்து கொண்டுள்ளேன். அதற்காக என்னை நானே தயாரித்துக் கொள்ள முனைந்து செயற்பட்டு வருகின்றேன்.

"எப்பிடி இந்த விலைக்குக் குடுக்கக் கட்டுகிறது, உங்களுக்கு?'' எனக் கேட்பவர்கள் சிலர்; 'மல்லிகையைப் பார்க்கும் பொழுது மனசுக்குள் ஒரு சந்தோசம் ஓடுகிறது' என மனந் திறந்து பாராட்டுவோர் ஒரு ரகத்தினர்; 'உங்களை நாங்கள் அடிக்கடி நினைத்துக் கொள்ளுவோம்; உங்களுடைய உழைப்பு அப்படிப்பட்டது' என நெஞ்சார வாழ்த்துவோர் பலரை நான் அடிக்கடி சந்திப்பதுண்டு. உண்மையைச் சொல்லுகின்றேன்: இப்படியானவர்களின் ஆசிர்வாதம் தான் என்னை இதுவரையும் சுக தேசியாக வாழ வைத்திருக்கின்றது; சலியாமல் உழைக்க உந்து சந்தியாகத் திகழுகின்றது.

என்னைப் புரிந்து கொண்டவர்கள் ஏதோ ஒரு வகையில் உதவுகின்றனர். அந்த உதவிதான் மல்லிகைக்கு பசளையாகவும் அடி நீராகவும் இதுவரை உதவி வந்துள்ளது. அந்த இதயங்கள் என்னிடம் எந்தகைய கைமாறொன்றும் எதிர் பார்ப்பதில்லை. அது தான் ஆத்மீகத் தொடர்பு என்பது.

— டொமினிக் ஜீவா

சுவைத்து மகிழுங்கள்

## கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம்

யாழ்நகரில் தரமானதும் சுவையானதுமான
தயாரிப்புக்களுக்கு இன்றே விஜயம்
செய்யுங்கள்

ஐஸ்கிறீம் வகைகள்
ஐஸ் கோப்பி
ஐஸ்ஜெலி
சொக்லட்கிறிப்ஸ்
ஸ்ரோபறிகிறீம்
குளிர்பான வகைகள்
சிற்றுண்டி வகைகள்

அனைத்துக்கும் யாழ்நகரில் சிறந்த இடம்

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

24077
24428

# எழுத்தாளருக்கு ஒரு மண்டபம்

கலாசார வேர் ஆழப் பரப்பிய இந்த மண்ணில், இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட, கலாசார நிகழ்வுகள் தினசரி நடந்தேறி வருவதையிட்டுப் பலரும் தமது வியப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இது அப்படியொன்றும் அதிசயமல்ல. ஒரு பாரம்பரிய பண்பாடுள்ள இனம் தனது பற்றிப் படர்ந்த கலாசார வேர்களின் மூலம் தான் தனது ஜீவ சக்தைப் பெறுகின்றது என்பது புதினமானதல்ல.

பழைய இலக்கியத்தில் மூழ்கித் தெளிந்தவர்களுக்கு, கம்பன் கழகத்தினர் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதன் பெறுபேறாகத் தமக்குத் தமக்கென 'கம்பன் கோட்டம்' என்றொரு நிறுவனத்தை நல்லூரில் நிறுவி, ஒரு புதிய கலைப் பொலிவை ஈழத்துத் தமிழுக்குத் தந்து வருகின்றனர். இந்த அமைப்பில் பல இளைஞர்கள் இன்று தமிழுக்காக உழைத்து வருவது பலராலும் விதந்தோதப்பட்டு வருகின்றது.

ஆண்டு தோறும் கம்பன் விழாவை வெகு சிறப்பாக நடத்தி வருவது இவர்களது சிறப்பியல்புகளில் ஒன்று.

அடுத்தது, இசைக் கலைஞர்களின் சாதனை.

நல்லூர் சட்டநாதர் வீதியில் ஒரு மாமண்டபத்தை நிறுவி, கடந்த மாதம் பாரிய முறையில் இரு வாரங்கள் தொடர்பாக இசை விழாவை நடத்தி முடித்தனர்,

"இளங் கலைஞர் மன்றம்" என்ற நாமகரணத்தால் அழைக்கப்படும் இந்த மன்றத்தின் மண்டபம் ஒரு கலாசார மண்டபமாகவே இன்று திகழ்கின்றது.

இவைகள் அனைத்தையும் நடைமுறைச் சாதனையாக்கிய சகலரையும் மனமாரப் பாராட்டுகின்றோம் நாம்.

இந்த மகிழ்ச்சியான நேரத்திலும் நம்மிடம் பெரிய மனக் குறையும் ஒன்றுண்டு. இந்தப் பிரதேசத்து எழுத்தாளர்களுக்கு அவர்களுக்கென்று ஒரு மண்குடிசை கூட இல்லையே என்ற ஆதங்கம் தான் அது. சந்திக்க, கலந்துரையாட, நூல் வெளியிட, ஏன் தேநீர் அருந்தி மனம் விட்டுப் கதைக்க ஓர் இடம் இதுவரையும் இல்லை.

எழுத்தாளர்கள் யோசிக்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு நாம் சில வசதிகளையாவது செய்து வைத்திட வேண்டும். அதில் மண்டபம் முக்கியம்.

கூடி யோசித்தால் நிச்சயமாக இதனைச் சாதித்துக் காட்டலாம்!

7- 3- 93

## அஞ்சலிப்பூ

# புகைப் படக் கலையில் புதுமைகள் பல செய்தவர்

ந. இராசரெட்ணம்

*1958-ம் ஆண்டு என நினைக்கிறேன். நான் செல்லம்ஸ் ஸ்ருடியோவுக்குப் போயிருந்தேன். புகைப் படக் கலையில் எனக்கு எப்படியோ ஆர்வம் ஏற்பட்டிருந்த காலம் அது. அந்த நிறுவனத்துக்குள் போயிருந்து ஒரு முலையில் நின்று கொண்டிருந்த என்னை அன்புடன் விசாரித்து இருக்கையில் அமரச் சொன்னார் ஒருவர். எனக்குக் கூச்சமாக இருந்தது. கதிரையில் இருந்தேன். அப்பொழுது வெளியில் இருந்து வந்த ஒருவர் என்னுடன் கதைத்துக் கொண்டிருந்தவரைப் பார்த்து ''நீக்கிலஸ் நான் பேந்து வாறன்'' எனச் சொல்லி விட்டுச் சென்றார்.*

*அப்பொழுதுதான் நான் தேடி வந்த ஸ்ருடியோ பிலிப் நீக்கிலஸ் இவர்தான் என மட்டுக் கட்டிக் கொண்டேன். மரியாதையின் நிமித்தம் சட்டென எழுந்து நின்றேன். நான் திடீரென எழுந்து கொண்டு மரியாதை செய்ததைக் கண்டு அவர் சொண்டுக்குள் சிரித்துக் கொண்டே, முதுகில் தட்டிக் கொடுத்து ''இருந்து கதையும் தம்பி!'' என ஆதரவாக என்னைத் தன் பக்கம் இருத்திக் கொண்டார்.*

*அந்தக் கணமே அவரை எனது குருநாதராக மனதுள் வரித்துக் கொண்டேன்.*

*''எனக்கு இந்தப் போட்டோ பிடிக்கிற கலையிலை ரொம்ப ஆசை. கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அதை முறையாகப் படிச்சுப் போட வேண்டுமென்பதுதான் என்ரை விருப்பம். அதுதான் உங்களைத் தேடிக் கொண்டு வந்தனான்!'' வார்த்தைகள் திக்கித் திறணித்தான் வந்தன. பயம் வேறு. எங்கே என்னை நிராகரித்துப் போடுவாரோ என்ற மனக் கிலேசத்துடன் தான் சொல்லி முடித்தேன்.*

*''நான் நல்லா யோசிக்க வேணும் தம்பி. எதுக்கும் நாளைக்கு ஒருக்கா வந்து என்னைப் பாருமன்'' எனச் சொல்லி எனக்கு விடை தந்தவர் எழுந்து வாசல்வரைக்கும் வந்தார்.*

என்னை அவர் நடத்தின விதம் என் மனசை அப்படியே கவ்விக் கொண்டது. என்ன பாடுபட்டாவது அவரிடம் வேலை பழகிவிட வேண்டும் என்ற ஓர் ஆவலைத் தூண்டியது,

அடுத்த நாள் அதே நேரம் அவரைத் தேடிச் சென்றேன்.

"டாக் ரும் வேலைகளைப் பாரும் தம்பி. அதுக்குப் பின்னர் தான் உம்மட திறமையைப் பாத்து வேலைக்கு எடுக்க முடியும்" என்றார்.

அன்று அவர் என்னை அவதானித்து எனக்குத் தன்னம்பிக்கை ஊட்டியபடியால் அவரிடம் நிறைய நிறையக் கற்றுக் கொண்டேன்.

இவரது தந்தையாரும் ஒரு புகைப் படக் கலைஞர். அத்துடன் ஓர் ஓவியரும் கூட. பெயர் மாணிக்கத்தம்பி. 1922 ல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இவர் ஓவியத்தை மையமாகக் கொண்ட ஸ்ருடியோ ஒன்றை நடத்தி வந்தார். அந்தக் காலத்தில் சிறுவனாக இருந்த போதிலும் ஸ்ருடியோவுக்கு அடிக்கடி சென்று சென்று வந்தார். இவரது ஆரம்பக் குருவே இவரது தந்தையார்தான். தந்தையாரின் அடியொற்றி இவரும் புகைப்படக் கலையில் பலரும் வியத்து பேசும் அளவுக்குக் கலை நுட்பம் செறிந்த புகைப்படங்கள் பலவற்றைக் கடந்த காலங்களில் எடுத்துள்ளார்.

1941 ல் யுத்த காலத்தில் திடீரென்று இவருக்குப் பட்டாளத்தில் சேர வேண்டுமென்ற ஆசை தோன்றியது. பட்டாளத்தில் சேர்ந்து இந்தியா, ஆபிரிக்கா, அபிசீனியா, எகிப்து, பலஸ்தீன், ஜோர்டான் ஆகிய நாடுகளுக்குப் பட்டாளத்தானாகக கடமை புரிந்துள்ளார். இந்தக் காலத்தில் புகைப்படக் கலையை மறந்து ஊர் ஊராகச் சுற்றி வந்தார். 1947 ல் திரும்பி வந்த இவர், சொந்தமாக ஒரு ஸ்ருடியோவில் பங்காளராகச் சேர்ந்தார். அபிப்பிராய வித்தியாசம் காரணமாக அதிலிருந்து விலகி, 1950 ல் செல்லம்ஸ் ஸ்ருடியோவை நிர்வகித்தார்.

இந்தக் கால கட்டத்தில்தான் நான் இவரிடம் சென்று இவரைச் சந்தித்தேன். என்னைப் போலவே இவரைக் குருவாகக் கொண்டு வேலை பயின்றவர்கள் பலர். அவர்களில் பிரபல படப் பிடிப்பாளர்களான எஸ். டி. அரசு, சாவகச்சேரி முத்துலிங்கம், ஞானம் ஸ்ருடியோ ஞானப்பிரகாசம் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

தொழில் நுட்பம், நுணுக்கம் சம்பந்தமாக யார் வேண்டுமானாலும் — இளந் தலைமுறையைச் சேர்ந்த யார் என்றாலும் இவரிடம் போய்க் கேட்டால் சகல நுட்ப, நுணுக்கங்களையும் சிரமம் பாராது சொல்லிக் கொடுப்பார். தொழிலைத் தெய்வமெனக் கொண்டாடும் மனதினரான இவர் பழகுவதற்கு ரொம்பவும் இனிமையான சுபாவங்களைக் கொண்டவர். ஏதாவது அலுவல்கள் காரணமாக வெளிக்கிளம்பும் பொழுது ஒரு சில நிமிடங்களுக்கு முன்னரே அங்கு போய்ச் சேரக்கூடியதாக நேரத்தைக் கணம் பண்ணிச் செயல்படுபவர்.

சமீபத்தில் யாழ். பல்கலைக் கழகத்தில் நடந்த புகைப் படக் கலை சம்பந்தமான ஓர் அங்குரார்ப்பணக் கூட்ட ஆரம்பத்தில் பல ஆர்வலர்கள் மத்தியில் இவர் கௌரவித்துப் பாராட்டப் பெற்றது குறிப்பிடத் தக்கது. "புறநிலைப் படிப்புகள் அலகு" என்ற இந்தப் புதிய அமைப்பின் இணைப்பாளரான திரு. இரா. சிவச்சந்திரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, கலைப் பீடாதிபதி பொ. பால சுந்தரம்பிள்ளை அவர்கள் அப் பாராட்டுரையை நடத்தி இப்படியான முதிர்ச்சி பெற்ற கலைஞரைக் கௌரவித்தது யாழ்ப்பாணத்தில் நடந்த மிகப் பெறுமதி மிக்க சம்பவங்களில் ஒன்றாகும்.

திரு. நிக்கிலஸ் அவர்கள் தனது புகைப் படப் படிப்பு முதல் அனுபவத்தைப் பற்றிச் சமீபத்தில் ஓர் பேட்டியின் போது குறிப்பிட்டதாவது: சென் பற்றிக்ஸ் கல்லூரியின் இவரது ஆசிரியரான கே. எஸ். பி. செல்லத்துரை என்பவரது மகனுக்கு முதற் சற்பிரசாதம் என்ற தேவநற்கருணை பெறும் முதல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆசிரியர், மாணவரான இவரை அந்த நிகழ்ச்சியைப் படமெடுத்து உதவும்படி கேட்டுக் கொண்டார். இவரும் ஒரு வித த் திகிலுடன் படத்தை எடுத்து முடித்தார். எடுத்த முதல் படமே மிக அழகாகவும் கச்சிதமாகவும் அமைந்தது. இதையிட்டு இவருக்கு மிகவும் மகிழ்ச்சி

இவருக்கு 1930 ல் மற்றொரு மறக்க முடியாத நிகழ்ச்சியும் நடந்தது. அன்றைய வெள்ளைக்கார கவர்ணர் சேர். அன்றூ கால்டிகொட் அவர்கள் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அவரை அன்னம் போல அமைத்த அலங்காரப் படகொன்றில் ஊர்காவற்றுறைக்கு அழைத்துச் சென்றார்கள். அதை இவர் அழகிய கோணத்தில் புகைப் படமாக்கினார். அந்தப் புகைப் படம் கொழும்பில் இருந்து வெளிவரும் "ரைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகையில் முழு உருவத்தில் முன் பக்கத்தில் வெளிவந்தது. இதை அவதானித்துப் பார்த்த பலர் நாடு பூராவும் இருந்து தமது பாராட்டுக்களை அப்போதே தெரிவித்துக் கொண்டனர்.

இத்தனை சிறப்புகளும் பொருந்தியுள்ள ஒருவரை நான் எனது குருநாதராக வரித்துக் கொண்டதை எண்ணியெண்ணி மகிழ்ச்சி கொள்ளுகின்றேன். இன்னும் இத் துறையில் ஏதாவது ஆலோசனையோ ஒத்துழைப்போ தேவை என ஏற்படும் சமயங்களில் எல்லாம், இவரைத் தேடி இவரது வீட்டுக்கு செல்வது எனது வழக்கம். தேவை ஏற்படின் இவர் சிரமத்தைப் பாராமல் என்னைத் தேடி பேபி போட்டோவுக்கே வந்து விடுவதுமுண்டு.

இன்று எழுபது வயதுக்குள் நுழைந்திருக்கும் திரு. பிலிப் நிக்கிலஸ் அவர்கள் பலராலும் நேசிக்கப்படும் ஒருவராகும். தனது பரம்பரையைத் தொடரும் நிமிர்த்தமாகத் தனது மகனையும் புகைப் படத் துறைக்குள் பணிபுரிய வைத்துள்ளார். இவரது மகன் ஜோய் ஜெயக்குமார் வீரகேசரிப் படப் பிடிப்பாளராகும்.

பல சாதனைகளைப் படப்பிடிப்புத் துறையில் சாதித்த இவர், இன்னும் மௌனியாகவே தொழில் செய்து வருகிறார். பரபரப்பை அறவே விரும்பாத இவரது சுபாவம் கௌரவிக்கத்தக்கதாகும்.

# மதுரை அமெரிக்கன் கல்லூரி

— டொமினிக் ஜீவா

தமிழ் நாட்டுக்குப் போயிருந்த ஒரு சமயம், மதுரைக்குச் சென்றிருந்தேன். வழக்கமாக மதுரையில் நான் சந்தானம் லாட்ஜில் தான் தங்குவது வழக்கம். மதியம் சாப்பிட்டு விட்டு பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாங்கக் கடைத் தெருப் பக்கம் போகும் வழியில் சுவரொட்டி ஒன்று கண்ணில் பட்டது.

காலேஜ் ஹவுஸில் இலக்கியக் கூட்டம் என அறிவித்தது, அந்த நோட்டீஸ். குமரி அனந்தன் தலைமையில் சாலமன் பாப்பையா பேசுவார் எனவும் விபரம் தரப்பட்டிருந்தது அந்தச் சுவரொட்டியில் நான் தங்கியிருந்த லாட்ஜுக்குப் பக்கமாகத்தான் கூட்டம் நடக்கும் மண்டபம் இருந்தது. நண்பர் சாலமன் பாப்பையா எனது நீண்ட நாளைய நண்பர். மல்லிகை அபிமானி. அத்துடன் குமரி அனந்தன் எனக்குத் தெரிந்தவர். ஒரு தடவை 'இதயம் பேசுகிறது' என்ற மணியனின் இதழுக்காக நாம் இருவரும் இலக்கியச் சந்திப்பொன்றை நடத்தியிருந்தோம். அது பின்னர் அந்த இதழிலும் படத்துடன் வெளிவந்தது. ஆகவே அந்த இருவரையும் சந்திக்கும் ஆவலில் கூட்டத்திற்குப் போவது என முடிவெடுத்திருந்தேன்.

நான் மதுரையில் தங்கியிருப்பதை நண்பர்கள் மூலம் தெரிந்து கொண்ட ராஜபாளையத்து நண்பர்கள் என்னைத் தேடி மதுரைக்கே வந்து விட்டனர். அடுத்த நாள் ராஜபாளையம் வருவதாக அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்த பின்னர் இலக்கியப் பிரச்சினைகளைப் பற்றிச் சிறிது சம்பாஷித்து விட்டு விடை பெற்று ஊர் திரும்பினர்.

நான் மாலை கூட்டத்திற்குப் போய்ச் சேரும்போது நண்பர் சாலமன் பாப்பையாவே பேசிக் கொண்டிருந்தார். என்னை அந்த இடத்தில் பார்த்ததும் அவருக்கு ஆனந்த அதிர்ச்சி. பேச்சினிடையே என்னையும் மல்லிகையையும் பற்றிச் சற்று நேரம் விளக்கமாக எடுத்துரைத்தார். கூட்டத்தினர் திரும்பித் திரும்பி என்னையே பார்த்தனர். பலராலும் கவனிக்கப்பட்டேன்.

எனக்கோ தர்ம சங்கடமான நிலை.

அடுத்த நாள். ராஜபாளையம் போவதற்காக ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தேன். பகல் சாப்பாட்டுக்குப் பின்னர் போவது என முடிவெடுத்து, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன்.

அறைக் கதவு தட்டப்பட்டது.

திறந்தேன். இருவர் வெகு பவ்வியமாக என்னை அணுகிக் கடிதம் ஒன்றைத் தந்தனர். மதுரை அமெரிக்கன் கல்லூரி மன்றம் எழுதிய கடிதம். தங்களது கல்லூரித் தமிழ் மன்றத்தில் என்னை ஓர் இலக்கியக் கலந்துரையாடலுக்கு ஒத்துக் கொள்ளும்படி அக்கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது. பகல் 12 மணிமுதல் ஒரு மணி வரை இக் கூட்டம் நடைபெறும் என எழுதியிருந்தது.

எனக்கோ ஒரே அலுப்பு. ராஜபாளையம் போக வேண்டும் என்ற நிலை. அங்கும் இலக்கியப் பேச்சு. சாப்பாட்டுக்குப் பின்னர் சற்றுக் கண்ணயர்ந்து ஓய்வெடுக்கலாம் என்ற மன நிலை. நான் அந்த அழைப்பை வந்த மாணவர்களிடம் திருப்பித் தந்து விட்டு, 'தயவு செய்து மன்னிக்கவும். எனக்கு நேரம் இல்லை. உங்கள் அதிபரிடம் மன்னிப்புக் கேட்டதாகச் சொல்லுங்கள்' எனச் சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன்.

அரை மணி நேரம் சென்றிருக்கும். மறுபடியும் கதவு தட்டப் பட்டது. திறந்தால் நண்பர் போத்திரெட்டி நின்று கொண்டிருந் தார். ஈழத்து இலக்கியத்தின் மீது அயராத பக்தி கொண்டவர் அவர். கடிதம் ஒன்றையும் நீட்டினார். நண்பர் சாலமன் பாப் பையாவின் காகிதம் அது. அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என அன்புக் கட்டளையிட்டது அக் கடித வாசகம்.

பெரியதொரு ரோஜாப் பூமாலை சூட்டி வரவேற்றார்கள். 'ஈழத்து நவீன இலக்கியத்தின் போக்கும் — வீச்சும்' என்ற தலைப் பில் உரையாற்றினேன். அருமையாக அமைந்தது அப்பேச்சு. ஒரு மணி நேரப் பேச்சு, ஒன்றரை மணி நேரம் நீடித்தது. மெத்தச் சந்தோசப் பட்டனர் மாணவர்கள். போத்திரெட்டி உணர்ச்சிவசப் பட்டு என்னைக் கட்டிக் கொண்டார்.

கூட்ட முடிவில் அதிபர் அறைக்கு அழைத்துச் சென்றனர். நான் விடை பெற்று எழுந்து கொண்டேன். அதிபர் ஒரு தபால் உறையை நீட்டினார். எனக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. வற்புறுத்தினார். பெற்றுக் கொண்டேன். பின்னரும் ஒரு கவரைத் தந்தார். ''நாங்கள் வரும் விருந்தினர்களுக்கு உபசாரம் செய்வது வழக்கம். இன்று மதிய போசனம் தர கால அவகாசம் போத வில்லை. இதை அதற்காக வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

திரும்பவும் நான் தங்கியிருந்த லாட்ஜுக்கே காரில் கொண்டு வந்து விட்டனர்.

அறைக்குள் வந்தவுடன் கவரைப் பிரித்துப் பார்த்தேன். ஒன்றில் 250 ரூபா இருந்தது. மற்றொன்றில் 55 ரூபா இருந்தது. முழுதும் இந்திய ரூபாக்கள். நான் நெகிழ்ந்து போய் விட்டேன்.

மல்லிகையைத் தவிர, வேறு எந்த உத்தியோகமும் எனக் கில்லை. அதுதான் எனது சகலமும். ஓய்வூதியம் என்ற எதிர்காலப் பாதுகாப்பும் எனக்கில்லை. இடைக்கிடையே தமிழகப் பயணம் வேறு. மல்லிகை இவைகளைத் தாங்காது. இதைச் சரிவரப் புரிந்து கொண்ட தமிழகத்து இலக்கிய நிறுவனங்கள் எனக்கும் காலத்திற் குக் காலம் கைதந்து உதவி வந்துள்ளன.

இவ்வாறு இல்லாது போனால் எனது இலக்கியப் பயணங்களே தடைப்பட்டுப் போயிருக்கும்.

இந்த மண்ணிலும் கடந்த பல காலங்களாக இலக்கியக் கூட் டங்கள், கலந்துரையாடல்கள், சொற்பொழிவுகளுக்குப் போய் வருகின்றேன். திரும்பி வரும் வேளைகளில் எனக்கு ஏனோ மதுரை அமெரிக்கன் கல்லூரி ஞாபகம் வந்து விடுவதுண்டு.

# முகாமுக்குப் போகாத அகதி

கோகிலா மகேந்திரன்

ஒவ்வொரு நாளும் அவளு டைய மனம் கொஞ்சம் கவலை, கொஞ்சம் நற் சிந்தனை கேட்டு வாங்கிக் கொள்ளும்.

அன்று காலையில் சுமார் ஐந்து மணிக்கு விழிப் வந்த போது, திறந்திருந்த சாளரத்தி னூடே, பனி மூடும புகையிரு ளில் முகம் நனைத்த மரங்கள் மௌனமாய் நிற்பதைப் பார்த் தான்.

இன்றும் வழக்கம் போல தன் பரீட்சை மேற்பார்வைக் குப் போக வேண்டும் என்பதே முதலில் நினைவு வந்தது.

“அக்கா... உந்த சுப்பவிசன் காக வந்தோண்ணை எனக்குச் சப்பாத்து வாங்கித் தந்தி டுங்கோ...”

ஆரவாரம் அணைக்காத பஞ்சு மேனித் தங்கையின் வேண்டுகோள்.

“ஓமோம்...... அதுக்கேன் இப்ப விடியப்புறம் எழும்பி நிக்கிறாய்?”

“இல்லையக்கா, பொம்பர் வருது... அம்மா எழும்புங்கோ... சின்னண்ணா எழும்பு... எடியே ருபி எழும்படி...” அந்த வீட் டின் ஆறு ஜீவன்களையும் எழுப் புகிற தங்கையின் கண்ணில் தெரியும் பயம் கூடக் கலா பூர் வமாய் இருப்பதை ரசித்தபடி எழுந்து நற்சிந்தனைக் கொப்பி யைப் புரட்டி அன்றைய சிந்த னையைப் படித்தாள்

“வழி தவறிய குருடனுக்கு இருளும் ஒன்றுதான், ஒளியும் ஒன்றுதான்” என்பதை வாசித்த படி, முகம் கழுவக் கிணற்றடிக் குப் போன போது, சுற்றிக் கொண்டிருந்த பொம்மரின் முத லாவது குண்டு வெடிப்புக் கேட்டது.

“அப்ப்ப்...பா...” அன்றைய காலை அமைதியைக் சுபளீகரம் செய்துவிட்டு ஒலி அண்மையில் தான் கேட்டது.

சரக்கென்று மனதில் ஒரு குலுக்கல்:

“என்ன நடந்தாலும் பரீட்சை நடக்கும். நான் நின்று மினக்கட ஏலாது” சிந்தனை மயிர்கள் ஒவ்வொன்றும் சிலுப்பி நிற்கையில் பொம்மர் குண்டு களைப் பொழிந்து தள்ளிவிட்டு மறைந்து போனது.

“இது வழக்கந்தானே...?” என்று அந்த நினைவை அகற்றி விட்டு, வேலைகளைத் தொடர ஆயத்தமான போது—

நின்று நின்று, நேராகவும், முன்னும் பின்னும், தலைக்கு

மேலும், காலுக்குக் கீழும் என்று அடிக்கொடுத்தன அலை. அலை என்ன எறும்புகளா? இல்லை— றவுண்டுகள்!

மூலையின் இருட்குகையில் ஒரு சில விளக்குகள் பற்றிக் கொண்டன. மனதில் சிறகடித்த பாடல்கள் ஈசல் இறகுகளாய் உதிர்ந்து போயின. எப்படி இந்த இடத்திற்கு றவுண்ட்ஸ் வரும்? இந்த அதிகாலை நேரத்தில்?

"ஆமி மூவ் பண்ணிட்டான்; ஐயோ பிள்ளையார் கோயிலடிக்கு வந்திட்டான்..."

திடு திப்பென்று தெருவில் அல்லோல கல்லோலம்! திடீரென வெட்டிச் சரித்த மரம் போல வாழ்விழக்கத் தொடங்கியது ஊர்.

கொளுத்தல்கள்; கைது செய்யப்பட்டோர்கள் மீது கொடூரமாய் நிகழும் ஆக்கினைகள் பற்றிய செய்திகளைக் கேட்டபடியே, ஊர்மக்களில் அநேகமானோரைப் போல, உடுத்த உடுப்புடனும், தன்னையே நம்பியிருந்த குடும்பத்துடனும் வெறிச் சோடிப் போன மனத்துடனும் அகதியானான் அவன்.

ஊரின் எல்லைக்கு இப்பால் இருந்த வைரவர் கோயிலுக்கு வந்தாயிற்று. வெளியே இரவு மனம் மாதிரி அமைதியுற்றிருந்த போது அம்மா சொன்னாள்—

"இனிமேல் எங்கடை வீட்டின்ரை பனங்காயையும், எங்கடை பனையின்ரை கிழங்கையும் நாங்கள் பாக்க மாட்டம்!"

"அக்கா, பப்பியை விட்டிட்டு வந்திட்டம்... ... பாவம் றவுண்ட்ஸ் பட்டு செத்துப் போச்சுதோ என்னவோ?" தங்கையின் சோகம்.

"ஐடென்டிக் காட்டையும் விட்டிட்டு வந்திட்டன். ஆமி தற்செயலாய்ப் பிடிச்சானோ... அழிஞ்சன்..." தம்பியின் சோகம்.

"படிப்பிக்கிறதுக்குத் தேவையான புத்தகங்களைக் கூட அடச்சீ..." அடி நெஞ்சில் தெளியும் அலறலுக்கு இடையிலும், "அடுத்தது என்ன?" என்ற கேள்வி.

ஆசிரியர் என்ற அந்தஸ்து அகதி முகாமுக்குப் போவதைத் தடுத்தது. போனாலும் கூட நிவாரணம் இல்லைத்தானே?

மத்தியதர வர்க்கத்தினர் எல்லோருடனும் போட்டி போட்டுக் கொண்டு அவனும் வீடு தேடும் படலத்தில் கால் வைத்தான்.

கீழ்த்திசை வெயிலின் கிரணங்களாய் நீண்டு விழுந்தவளது நிழல் குறுகி, மீண்டும் மேற்றிசை வெயிலில் கிரணங்களால் நீண்டு, குறுகி நீண்டு நீண்டு குறுகி— யாழ்ப்பாணக் கிடுகு வேலிகள் அனைத்தையும் தடவி ஓய்ந்த போதுதான......

நல்லூரில் இருக்கும் 'கொழும்புமாமி' வீட்டில்கொஞ்சக் காலம் தங்க இடம் கேட்கலாம் என்ற எண்ணம் வந்தது.

"ஒழுங்காக உலைவைத்து நாலு நாளாயிற்று; சரியாக உறங்காமல் நூறுவளிக்கு தியாளங்கள் ... அடக்கவென்று ... அமர்ந்து ... எகர் பலமுறை வழிந்தோடிற்று" என்ற நிலையில் மிஞ்சியிருந்த ஒரே ஒரு தகரப் பெட்டியுடன் மாமி வீட்டில் இறங்கினான். அவன் அம்மாவும் தம்பி தங்கையுமாய் ஐந்து ஜீவன்கள் அவனுக்குப் பின்னால்.....

மாமி 'வாருங்கோ' என்று வாய் நிறையச் சொல்லா விட்-

டாலும், 'வரவேண்டாம்' என்று சொல்லவில்லை என்ற அளவில் நிம்மதி.

ஒழுங்காகக் குளித்து நாலு நாள் ஆயிற்று அல்லவா? இன்று நல்ல முறையில் குளிக்கலாம் என்ற நினைவு போதை ஊட்டக் கிணற்றடிக்கு ஓடினாள். விறு விறென்று இரண்டு வாளி அள்ளி ஊற்றிக் கொண்டாள். மெல்லிய குளிர் ஒரு சந்தோஷமாய் உடலெல்லாம் சுற்றி வருகிறது என்று நினைக்க முதல், மாமி 'விண்டோ' வுக்குள்ளால் பார்த்திருக்க வேண்டும்!

''மாலா... வட் இஸ் திஸ்? பட்டிக்காட்டுப் பழக்கம்?'' குரலின் இறுக்கத்தில் அதிர்ந்து போனவள், 'ஏன், ஏன் என்ன மாமி?' என்றாள்.

''நாங்கள் கிணற்று வாளியை நிலத்திலை வைக்கிறேல்லை... அது மண்... டேற் கிணற்றுக்குள்ளை போயிடும் சிச் சிச் சி''

அப்போதுதான் ஏதோ புரிந்து அவள் கீழே பார்த்தாள். நல்ல பளிங்கு போல் சுத்தமாக இருந்த கிணற்றின் சீமெந்துக் கட்டில் அவள் வாளியை வைத்துத்தான் இருந்தாள்.

''சொறி... மாமி'' பதற்றத்துடன் வாளியை எடுத்து கையில் வைத்துக் கொண்டாள். அந்த நேரத்தில் அவள் முகத்தை ஒரு கவிஞன் பார்த்திருக்க வேண்டும். ''மூன்றாம் பிறை நிலவைக் கிள்ளிக் தரையில் போட்டதுபோல'' என்று பாடியிருப்பானோ என்னவோ, அது அவளைத்தான் கேட்க வேண்டும்.

இந்தச் சீமெந்து நிலத்தில் ஒருவேளை இரண்டு துணிக்கை மண் இருக்கலாம். அது ஒட்டிக் கொண்டு கிணற்றுக்குள் போய் விடும் என்பதா மாமியின் பயம்? அல்லது......? கிணற்றுக்குள்ளே நீரின் அடியில் படை படையாய் இருக்கும் மண்ணை மாமி என்ன செய்யப் போகிறா?

பகல் முடிந்து இரவு வந்த போதும் நெஞ்சை ஏதோ குடைந்து கொண்டே இருந்தது. அந்தியில் மின்னல் வானத்தை வெட்டும் போதெல்லாம் வானம் அடிபட்ட விலங்கு போல அலறியது. மழை பெய்யவில்லை.

இரவு சாப்பிடாமலே நித்திரையாகிப் போன கடைசித் தம்பி எழுந்தான். ''அக்கா... பாத்றூம் போகப் போறன்...''

கலைப் பூவின் போன்ற பார்வை அவனுக்கு!

''மேசையிலை விளக்கு இருக்கு ராசா ... எடுத்துக் கொண்டு போயிட்டு வாங்கோ. மறந்திடாமல் நிறையத் தண்ணி ஊத்திட்டு வாங்கோ..''

அவன் மேசையில் இருந்த மாமியின் லாம்பை எடுத்துக் கொண்டு நகர்ந்தான். விளக்குடன் அவன் திரும்பி வரும்போது தான் மாமி கண்டிருக்க வேண்டும்.

''மை... கோட்... என்ன மாலா? யார் இந்த விளக்கைக் குடுத்தது? நாங்கள் விளக்கு பாத்றூமுக்குக் கொண்டு போறதில்லை. பிறகு அந்த அழுக்கெல்லாம் விளக்கிலை வந்திடும்!''

''அகதி என்ற அழுக்கு நிரந்தரமாய், வீடு வாசலினை இருக்கிறவையிலை படிஞ்சிடும். ஒரே நாளில் திடீரென்று ஏழையாகிப் போனவன்றை அழுக்கு நிரந்தரப் பணக்காரரிலை படிஞ்சிடும்...... உண்மைதான் ஓராயிரம் சொற்கள் ஒரேயடியாய் அவள் மனதில் எழுந்தன. வாயிலும் அவை எல்லாம் வாய்க்குள்ளேயே புகையாய்ப் பிசு பிசுத்துப் போயின.

"செச்செச்சி... நிலம் பழுதா யிடும்..."

"செச்செச்சி... சுவரில ஒட்டக் குடாது சுவர் அழுக்காயிடும்..."

"செச்செச்சி...... விசிற்றேர் ஸ வாற இடமில்லை..." அவளது இதயத்தின் உட்சுவரில் இருந்து பல கற்கள் இடிந்து விழுந்தன.

குருஷேத்திரத்துப் பார்த்த னாய்ச் சோர்ந்து நின்ற மூத்த தம்பி, ஓரிரு நாள்களிலேயே வேறு வீடு தேடப் புறப்பட்டு விட்டான். அவனுடன் வெளியே வந்த போது அவள் ஒன்றை வலியுறுத்தினாள்.

"எடேய்... நாங்கள் அகதி யாய் வெளிக்கிட்டம்... எங்களை விடக் குறைஞ்ச அந்தஸ்து உள் ளவையோடை சேர்ந்து இருக்க லாம். 'சினமன் கார்டினஸ் லெவல்' ஆக்களோடை இருக்கேலாது... நீ எங்கையாவது வறுமைப்பட்ட, படிக்காத சனங்கள் இருக்கிற வீட்டில ஒரு அறை பாத்துக் கொண்டு வா......"

அவன் தலையசைத்துவிட் டுச் சென்றான்.

நிஜம் என்பது கதையைவிட வியப்புக்குரியது தானே. இல்லா விடில் அவ்வளவு விரைவில் அந்த வீடு கிடைத்திருக்காது.

அவன் மீது மாமி செலுத்திய இரக்கம் நிறைந்த, அதே சமயம் ஏளனம் நிறைந்த பார்வைகளை விலக்கிக் கொண்டு அவள் இங்க வீட்டிற்கு இடம் பெயர்ந்தாள்.

அழகில் சிதேவியை நெட்டித் தள்ளிவிட்ட பெண் இந்த வீட் டின் நாயகி. இளம் கறுப்பில் கொஞ்சம் தூக்கலான நிறம். நிவாரணத்தை மட்டும் நம்பி வாழும் ஏழ்மை வாழ்வு.

ஓர் இரவும் அதன் குளிர் காற்றும், ஒரு பகலும் அதன் இள வெப்பமும் இன்பமாயிக் கழிந்தன.

காய்ந்த அறுகம்புல் தரை போலச் சவரம் செய்யாத முகத் துடன் இருந்த அந்த வீட்டு ஆண் சொன்னார்: "கமலம், முருங்கைக்காய்க் கறியிலை கொஞ்சம் அவைக்கும் குடு...... நாங்கள் இனி ஒரே வீட்டில் இருக்கப் போற ஆக்கள். குடுத்து வாங்கிச் சாப்பிட வேணும்..."

மேகக் கோட்டைகள் தகர்ந்து ஒரு நள்ளிரவில் அவள் உள்ளம் நிரம்ப மழை பெய்தது. ஏழை மக்கள் என்றாலும் உள்ளம் பெரியது. இவர்களோடு இருப் பது எளிது. இது ஒரு மகிழ்வு! கோழிகளும் நாயும் கூட வீட்டின் காலையை மிகச் சுதந்திரமாகப் பாவிப்பதைப் பார்த்துப் பூரித் துப் போனாள். நன்றியுடன் கறியைப் பெற்றுக் கொண்டு, தாங்கள் செய்திருந்த பூசனிக் காய்க் கறியில் பாதியை வாழை இலையில் போட்டு அவர்களிடம் கொடுத்தாள்.

உடனேயே அதில் கொஞ்சம் கிள்ளி வாயில் போட்டுக் கொண்ட கமலம், சொன்னாள்: "செச்செச்சி... இப்பிடியே பூசனிக் காய்க்கறி வைக்கிறது? இதென்ன ரீச்சர்? உப்புக் காணாது, மிள காயும் காணாது... நான் ஒரு நாளைக்கு வைச்சுக் காட்டிறன் பாருங்கோ... இதென்ன உங்க ளுக்கு ஒண்டும் தெரியேல்லை"

குத்திவிடுமோ என நினைக் கத் தோன்றும் கூரான மூக்கு. கமலத்துக்கு. அதிலே ஒரு மூக் குத்தி வேறு.

"செச்செச்சி... இதென்ன பாருங்கோ... வெள்ளிக்கிழமை எண்டால் விரதம் பிடிக்கிறேல் லையே நீங்கள்?..."

"ஐயோ, இதென்ன வீட்டுத் தூரம் எண்டாலும் பள்ளிக் கூடம் போறதோ?

"சிச்சிச்சீ... இதென்ன ரீச்சர்... இரவிலும் ஆரும் தலை இழுக்கிறதே?''

"ஐயோ இரவிலை வீடு கூட்டப்படாது பாருங்கோ''

இருட்டும் புழுக்கமும் துணையாக இருந்த ஓர் இரவில், இதுவரை காலமும் வாசிக்காமல் நிறுத்தியிருந்த, தகரப் பெட்டியோடு வந்துவிட்ட நற்சிந்தனைக் கொப்பியை அவள் புரட்டினாள்.

மலைவேம்பு மரநிழலும் காற்று வீசும் நீண்ட முற்றமுமாய் இருந்த வீட்டில் இருந்து புறப்பட்ட போது கடைசியாக வாசித்த பக்கம்—

''வழி தவறிய குருடனுக்கு இருளும் ஒன்றுதான் ஒளியும் ஒன்றுதான்'' அதன் கீழே அவள் எழுதத் தொடங்கினாள்.

''அகதியாகப் புறப்பட்டவளுக்கு'' வசனம் முடிய முன்னரே தொண்டையைச் செருமி, அங்கு சிக்கிப் போயிருந்த சோகத்தை வெளிக் கொணர முயன்றாள்.

முற்றத்தில் கோழி எச்சத்தின் காரநெடி மூக்கைத் துளைத்தது. ●

மல்லிகைப்பந்தல் வெளியீடுகள் -

2[illegible] - வது ஆண்டு மலர் விற்பனைக்குண்டு.
எம்முடன் தொடர்பு கொள்ளவும். — விலை 75 ரூபா

... 20 - 00
அட்டைப் பட ஓவியங்கள்
(35 ஈழத்து பேனா மன்னர்கள் பற்றிய நூல்)
... 25 - 00
ஆகுதி
(சிறுகதைத் தொகுதி — சோமகாந்தன்)
9 - 00
எவ்வலில் விழும் நாள்
(புதுக் கவிதைத் தொகுதி — வாசுதேவன்)
... 15 - 00
மல்லிகைக் கவிதைகள்
(51 கவிஞர்களின் கவிதைத் தொகுதி)
... 20 - 00
இரவின் ராகங்கள்
(சிறுகதைத் தொகுதி — ப. ஆப்டீன்)
... 20 - 00
தூண்டில் கேள்வி—பதில்
— டொமினிக் ஜீவா
ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள் 30 - 00
(சிறுகதைத் தொகுதி — சுதாராஜ்)

வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவுண்டு.

மேலதிக விபரங்களுக்கு: 'மல்லிகைப் பந்தல்'
234 B, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

# தகரக் கொட்டகை

ஆ. கனகசபாபதி

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இசை நாடகத்துக்காக அமைக்கப்பட்ட தகரக் கொட்டகை மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தது. அந்தத் தகரக் கொட்டகைதான் பின்னர் வின்ஸர் தியேட்டராக உருமாறி, அதன் பின்னர் இன்று ரிலோ தியேட்டர் என அழைக்கப்பட்டு வரும் சினிமாத் தியேட்டர் இருக்கும் கொட்டகை.

19 - ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் வியாபார நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள், தென் இந்தியாவில் இருந்து இசை நாடகக் குழுவினரை அழைத்து வந்து, பல கிராமங்களிலும் தற்காலிகமாக நாடக மண்டபங்களை அமைத்து, இசை நாடகங்களை நடத்து வந்தனர் என சில கலை ஆர்வமுள்ள அறிஞர்கள் ஆய்வு செய்து எழுதியுள்ளார்கள்.

இசை நாடகத்தின் சிறப்பையும் அதில் மக்கள் காட்டிய ஆர்வத்தையும் யாழ்ப்பாணத்தில் சில செல்வந்தர்கள் அறிந்து அவர்களும் இசை நாடகத்தைப் பார்த்து, அவர்களும் தென் இந்தியாவில் இருந்து இசை நாடகக் குழுவினரை அழைத்து வந்து நாடகக் கொட்டகைகள் அமைத்து நாடகங்களை நடத்தினர். அப்படிப்பட்ட செல்வந்தர்களில் இசைக் கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்த புத்துவாட்டி இரத்தினம் அவர்களும் ஒருவர். புத்துவாட்டி இரத்தினம் நன்கு பாடக் கூடியவர். அவரும் இசை நாடகத்தில் ஆர்வம் கொண்டு பயிற்சி பெற்று இசை நாடகங்களில் நடித்து புகழும் பெற்றவர். மற்றவர் கொட்டடிக் கறுத்தார். இவரும் செல்வந்தர் மட்டுமல்லாது மக்களால் நன்கு மதிக்கப்பட்டவராவர்.

இந்த இசை நாடகங்களைப் பார்த்த துரைராசா, அதில் ஆர்வம் கொண்டு யாழ்ப்பாணத்தில் வண்ணான் குளத்துக்கு முன் உள்ள தனது சொந்தக் காணியில் மிகப் பிரமாண்டமான முறையில் பெரிய தகரக் கொட்டகையை அமைத்தார். அக்காலத்தில் ஸ்ரான்லி வீதி கிடையாது. பெரும் வயல் வெளி. இந்த வயல் காணியில் பெரும் பகுதி வண்ணை சிவன் கோவிலுக்கும், கணிசமான காணி தகரக் கொட்டகையை அண்டிய பகுதி துரைராசாவுக்கும் சொந்தம்.

துரைராசா பெரும் செல்வந்தர். நன்கு கற்ற ஓர் அறிஞன். இவரைப் பெரிய துரைராசா என்றும் அழைப்பார்கள். தகரக் கொட்டகைத் துரைராசா என்றும் சொல்வார்கள். இந்தத் தகரக் கொட்டகையில் நாடக மேடை நவீன முறையில் மிகவும் சிறந்த முறையில் அமைத்து, இந்தியாவில் இருந்து ஓவியக் கலைஞர்களை அழைத்து வந்து நாடகக் காட்சிகளுக்கேற்ப சீன்களை (திரைகளை) வரைந்ததுடன் சீன்களின் இருபக்கங்களிலும் காட்சிகளுக்கேற்பப் பல தட்டிகளில் திரைச் சீலைகளுக்கு ஏற்ப ஓவியம் வரைந்து இருபக்கங்களிலும் பூட்டப் பட்டிருந்தது. அந்தத் தட்டிகள் முன்னுக்கும் பின் அரக்கக் கூடிய முறையில் றோலர்களில் இணைக்கப் பட்டிருக்கும்.

இந்தத் தட்டிகள் காட்சிகளுக்கேற்பத் திரைச் சீலைகள் இறக்கப்படும் பொழுது, பக்கத்துத் தட்டிகளும் திரைச் சீலைக்கேற்ற தட்டி முன் அரக்கப்படும். மற்றைய தட்டிகள் பின்னுக்கிழுத்து மறைக்கப்படும். உதாரணத்துக்கு, மாளிகைக் காட்சிக்குரிய திரைச்சீலை இறக்கப்பட்டால், மாளிகைக் காட்சிக்குரிய தட்டி முன் அரக்கப்படும். மற்றைய தட்டிகள் பின்னுக்கிழுத்து மறைக்கப்படும். இதேபோல் நந்தவனக் காட்சியோ, காட்டுக் காட்சியோ, மேகக் காட்சியோ, கடல் காட்சியோ மற்றும் எந்த விதமான காட்சியோ அதற்கேற்ப மேடை உடனுக்குடன் ஒழுங்கு செய்யப்படும். இப்படியான மேடை ஒழுங்குகள் மற்றைய நாடக மண்டபங்களில் சிறப்பான முறையில் அமைக்கப் படவில்லை என்று உறுதிப்படுத்திக் கூற முடியும்.

தகரக் கொட்டகைக்கும் மேடைக்கு ஒளி வழங்குவதற்கும் தனிப்பட்ட மடுவம் அமைத்து பெரிய லைற் மெஷின் பொருத்தப்பட்டிருந்தது. அந்த லைற் மெஷினைப் பராமரிக்கவும் இயங்க வைக்கவும் அற்புதம் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். லைற் மெஷினில் ஏதும் தவறுகள் ஏற்பட்டாலும் அற்புதம் அதை உடன் திருத்தித் தடையில்லாமல் ஒளி வழங்கும் ஆற்றல் உடையவர். நாடகக் காட்சிகளுக்கேற்ப மேடைக்கு வர்ண வர்ண நிறத்தில் ஒளி வழங்கப்படும். ஒளி அமைப்பு மிகவும் அற்புதமாக அமைக்கப் பட்டிருந்தது.

தகரக் கொட்டகையில் மற்றைய நாடக மண்டபங்களில் அமைக்கப்படாத முறையில், கலரி ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. கலரி ஆசனம் நல்ல கடினமான இரும்புக் கேடர்கள் நாட்டி கீழ் இருந்து மேலுக்குக் கொட்டகையின் முகட்டுக்குக் கிட்ட படிப்படியாக இருந்து பார்ப்பதற்கேற்ற முறையில் நல்ல கன காத்திரமான நீளப் பலகைகள் பூட்டி நாடகத்தைப் பார்க்கும் ரசிக மக்களுக்குப் பாதுகாப்பான முறையில் அமைக்கப் பட்டிருந்தது. கலரி ஆசனத்தில் ஏறக்குறைய ஆயிரம் மக்கள் இருந்து நாடகத்தைப் பார்க்கலாம். கலரி ஆசனத்துக்கு அடுத்த படியாக வாங்குகளும், முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்குக் கதிரையும் போடப்பட்டிருந்தன.

---

தகரக் கொட்டகையைச் சுற்றி மறைவுக்காகத் தகரங்கள் பூட்டப்பட்டிருந்தது. இரு பக்கங்களிலும் மக்கள் உட் செல்லவும், வெளியேறவும் பல கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன. கொட்டகைக்குள்ளும், வெளியிலும் ஒளி அமைப்புக்கள் செய்யப்பட்டிருந்தன.

இத் தகரக் கொட்டகை உருவாகிய பின், மற்றைய இடங்களில் அமைதிருந்த நாடக மண்டபங்கள் செயல் இழந்தன.

பெரிய துரைராசா அவர்கள் தென் இந்தியாவில் இருந்து பிரபல்யமான இசை நாடகக் குழுவினரை அழைத்து வந்து பல நாடகங்களை நடத்தி வந்தார்.

இசை நாடகத்தில் இந்தியாவிலேயே பெருமதிப்புப் பெற்ற இசை நாடகக் கலைஞர்களாக சுப்பையா பாகவதர், கிட்டப்பா, சுந்தராம்பாள், கள்ளபார்ட் நடராசா, கள்ளார்ட் கார்மேக ஆச்சாரி, சிதம்பரநாதன், ரி. பி. ராஜலெட்சுமி, சாரதாம்பாள், எம். ஆர். ஜானகி, எம் ஆர். கமலவேணி, எம். ஆர். கோவிந்தசாமி, ஆர்மோனியம் தேவுடு ஐயர் இப்படியான சிறந்த நடகக் கலைஞர்கள் இந்தத் தகரக் கொட்டகையில் நாடகம் நடத்தியுள்ளார்கள்.

1930-ஆம் ஆண்டில் மதுரை மீனலோசனி பால சங்கீத சபா நாடகக் குழுவினரை அழைத்து வந்து தகரக் கொட்டகையில் பல மாதங்களாக இசை நாடகங்கள் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகக் குழுவில் 84 பேர்கள் இருந்தார்கள். இக்குழுவில் பி ஆர். கோவிந்தன் மெயின் ராஜபாட்டாகவும். எம். ஆர். விஜயாள் மெயின் ஸ்திரிபாட்டாகவும் நடித்தனர்.

இந்த நாடகக் குழுவில் ஓவியக் கலைஞர் கொன்றையராஜ் இருந்தார். இவர் இந்தியாவிலேயே பிரபலமான ஓவியக் கலைஞர். ஓவியக் கலைஞர் கொன்றையராஜ் நாடகக் காட்சிகளுக்கேற்ப மேடையில் அபூர்வமான அமைப்புகளை பார்ப்பவர்கள் பிரமிக்கும் வண்ணம் அமைப்பார். மாளிகைக் காட்சி என்றால் மேடையில் உண்மையான மாளிகையைப் போலவே அமைப்பார். கடல் காட்சி என்றால் மேடையில் கடல் அலைகள் பொங்கி வருவது போல் அமைப்பார். இப்படியாகக் காட்சிகளுக்கேற்ற அமைப்புகளைச் சிறந்த முறையில் அமைத்துப் பார்ப்பவர்களை பிரமிக்கச் செய்வார்.

நடிகர்களின் பாத்திரங்களுக்கேற்ப ஒப்பனையும் செய்வார். உதாரணத்துக்கு இராமாயணத்தில் இராவணனுக்குப் பத்துத் தலைகளும், இருபது கைகளும் பொருத்தப்படும். பொருத்தப்பட்ட கைகளும் தலைகளும் பார்ப்பதற்கு உண்மையானவை போலவே தோன்றும். அநுமான் வேடந் தாங்கி நடிக்கும் நடிகருக்குப் பொய்க் குரங்கு முகம் அமைக்காமல், நடிகரது முகத்தையே குரங்கு முகம் போல் ஒப்பனை செய்து காட்டுவது வியப்பாக இருக்கும்.

இதேபோல் எந்தெந்த நாடகம் மேடையேற்றப்படுகிறதோ அதற்கேற்ப ஓவியக் கலைஞர் கொன்றையராஜ் அவர்களால் மேடை அமைப்புகள் சிறந்த முறையில் அமைக்கப்படும்.

இந்த நாடகக் குழுவில் மெயின் ராஜபாட் கோவிந்தனும், மெயின் ஸ்திரிபாட் விஜயாளினதும் பாடல்களும், நடிப்பும் நாடகம் பார்ப்பவர்களை பிரமிக்கச் செய்தது. இவர்களது பாடலையும், நடிப்பையும் பார்க்க நாடகம் நடைபெறும் நாட்களில் மேலும் மேலும் மக்கள் திரண்டு வருவார்கள். நாடகம் பார்க்க வரும் ரசிகர்கள், செல்வந்தர்கள், இவர்கள் பாடி முடித்ததும் மீண்டும் மீண்டும் பாடிய பாடலைப் பாடும்படி கேட்பார்கள். ஒரு சில ரசிகர்

கள் தாங்கள் அணிந்து வந்த மோதிரங்களையும், கை மணிக் கூடுகளையும், பணங்களையும் அன்பளிப்பாக மேடையில் ஏறி வழங்குவார்கள். செல்வந்தர்கள் முன் கூட்டியே திட்டம் போட்டு தம்மால் இயன்றளவு தங்கப் பதக்கங்களையும், பவுண் சங்கிலிகளையும் கொண்டு வந்து வழங்குவார்கள்.

இந்த நாடகக் குழுவினருக்குப் பின்னர் 1933 ஆம் ஆண்டளவில் தியாகராஜ பாகவதரின் நாடகக் குழு தகரக் கொட்டகையில் நாடகங்கள் நடத்தினார்கள். தியாகராஜ பாகவதரின் பாடலைக் கேட்பதற்காக பெருமளவான ரசிகர்கள் நாடகம் பார்க்க வருவார்கள். வருபவர்களில் அநேகர் ரிக்கற் கிடையாது செல்வதுமுண்டு. நாடகம் நடைபெறும் நாளில் மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி விடும். இதனால் நாடகம்பார்க்க வருபவர்களில் ஆவலை நிறைவு செய்ய தகரக் கொட்டகையைச் சுற்றி மறைப்புக்காகப் பொருத்தப்பட்ட தகரங்களைக் கழற்றி நாடகங்களை நின்று பார்ப்பதற்கு வசதி செய்து கொடுக்கப் பட்டது.

மீண்டும் மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கொம்பனியினரை அழைத்து வந்து தகரக் கொட்டகையில் பல மாதங்கள் நாடகங்கள் நடத்தப்பட்டது. இந்த நாடகக் குழுவில் 40 பேர்கள் அடங்கியிருந்தனர். இக்குழுவிலும் ஒலியக்கலைஞர் கொண்டையராஜ் அவர்களும் வந்திருந்தார். இந்த நாடகக் குழுவில் புளிமூட்டை இராமசாமியும் இருந்தார். இந்த நாடகக் குழு நாடகம் நடத்திய நாட்களில் யாழ்ப்பாணத்துக்கு மல்யுத்த வீரரான ராமதாஸ் என்பவர் வந்திருந்தார். கலை ஆர்வம் கொண்ட துரைராசா அவர்கள் ராமதாசுடன் தொடர்பு கொண்டு அவரைக் கொண்டு வீர சாகச விளையாட்டுகளைத் தகரக் கொட்டகையில் நடத்திக் காட்டினார். மல்யுத்த வீரன் ராமதாஸ் வீரசாகச விளையாட்டுச் செய்த பொழுது, தன்னுடன் மல்யுத்தம் செய்வதற்கு தகுதியுடைய வீரர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தால் வருமாறு சவால் விட்டார். இதைத் தொடர்ந்து இந்திய மல்யுத்த வீரர்களான சவுதான்சிங், சாம் சுந்தரா, சங்கர்சிங் இன்னும் பலர் இங்கு வந்தார்கள். இவர்களுடன் ராமதாஸ் மல்யுத்தம் செய்து தோல்வியடைந்தார். அதே காலத்தில் கொழும்பில் பிரபலமான மல்யுத்த வீரன் றகூல்சாவும் அவரது சகோதரரும் இங்கு வந்து தகரக் கொட்டகையில் மல்யுத்த வீரன் சவுதான் சிங்குடன், மல்யுத்தவீரன் றகூல்சா மல்யுத்தம் புரிந்தார். சவுதான்சிங்குடன் ஈடுகொடுக்க முடியாமல் றகூல்சா தோல்வி கண்டார். இப்படியான நிகழ்ச்சிகள் தகரக் கொட்டகையில் நடந்தேறி வந்தன.

பெரிய துரைராசா பெரும் செல்வந்தர். அத்துடன் ஆட்பலமும் கொண்டவர். நாடகம் பார்க்க வரும் கூட்டமும் இவரைப்பற்றி அறிவார்கள். இதனால் நாடகம் பார்க்க வருபவர்களால் வீண் குழப்பங்கள் ஏற்படாது. தகரக் கொட்டகையின் மேற்பார்வை கொட்டடி சினிவாசகம் அவர்கள். இவரும் ஓர் தனவந்தர் அத்துடன் முரடர். அவருடைய கம்பீர தோற்றமும் அவருடைய மீசையும் பார்ப்பவர்களைக் கலங்க வைக்கும். தகரக் கொட்டகையில் நாடகம் பார்க்க வருபவர்கள் கொட்டகைக்குள் விசில் அடித்துக் கலாட்டா செய்தால் சினிவாசகம் அவர்கள் குழப்பம் விளைவித்த

வர்களைப் பிடித்து வெளியில் கொண்டுவந்து அடியும் போட்டுத் துரத்தி விடுவார். இதனால் தகரக் கொட்டகையில் வீண் குழப்பம் ஏற்படாது.

தகரக் கொட்டகையின் மேடைக்குரிய பொறுப்பு கோணாந்தோட்டத்துக் கந்தையாவே நியமிக்கப்பட்டிருந்தார். கந்தையாவும் ஓர் ஓவியக் கலைஞர் அத்துடன் சிலம்படியிலும், வாள் வீச்சிலும் பெரும் திறமைசாலி. தகரக் கொட்டகையில் சீன்கள் மாற்றும் நாடகங்களுக்கான காட்சி அமைப்புகள் கந்தையா அவர்களே செய்வார். மேடை அமைப்பில் சிறந்த முறைகளைக் கையாளும் திறமையுடையவர் மேடை நிர்வாகம் அவரது பொறுப்பில் இருந்தது. இவர் சிறந்த ஒப்பனைக் கலைஞரும் கூட.

துரைராசா அவர்கள் இசை நாடகத்தை வளர்ப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவர். நாடக மேடையிலும் நாடகக் காட்சிகளுக்கு ஏற்பத் தான் கற்பனை செய்து அதன்படி மேடையில் காட்சிகளை அமைப்பார். உதாரணத்துக்கு வள்ளி திருமணத்தில் முருகப் பெருமான் கழுகு மலையில் நாரதருக்குக் காட்சி அளிக்கும் காட்சியை, கழுகுமலை போல் மேடையில் பிரமாண்டமான முறையில் மலை அமைத்து அந்த மலைமேல் மயில் வாகனத்தில் முருகப் பெருமான் காட்சியளிப்பது போல் அமைத்து நாடகம் பார்ப்பவர்களை பிரமிக்கும்படி செய்வார்.

நாடகத்தில் மேடையில் பல விதமான இசைக் கருவிகளைக் கொண்டு வாசிப்பித்து ரசிகர்களை மகிழவைப்பார். நாடகத்தையிட்டு விளம்பர நோட்டீசில் வாசிப்பவர்கள் உணர்வு கொள்ளவும், நாடகத்தைப் பார்ப்பதற்கு ஆர்வம் கொள்ளக் கூடிய கவர்ச்சிகரமான வசனங்களை எழுதி வெளியிடுவார். அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடைபெறும் என்ற வாக்கியத்தையும் அக்காலத்தில் வெளியிட்டவர் அவரே.

யாழ்ப்பாணத்தில் நன்கு பாடக் கூடியவர்களை ஊக்குவித்து இசை நாடகத்தைப் பயில வைத்து, அவர்களைக் கொண்டு பல இசை நாடகங்களை மேடையேற்றுவித்தார். தகரக் கொட்டகையில் யாழ்ப்பாணத்தில் இசை நாடகத்தில் அக்காலத்தில் முன்னணி வகித்தவர்கள் கூழங்கை சுந்தரம், நெல்லியடி கிருஷ்ண ஆழ்வார் (சுபத்திரை ஆழ்வார்), பபூன் செல்லையா ஆகியோர். இசை நாடகத்தில் யாழ் கலைஞர்களை உருவாக்குவதில் துரைராசா அவர்களுடன் இணைந்து செயல்பட்டவர் மெய்கண்டான் சரவணமுத்து அவர்கள்.

துரைராசா அவர்கள் இந்திய நாடக நடிகர்களுடன் யாழ் நாடக நடிகர்களையும் இணைத்து நடிக்கவைத்து யாழ் நடிகர்களுக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தார். இந்திய இசை நாடக நடிகர்களான மாரியப்ப பாகவதர், செந்தில்வேல் தேசிகர் ஆகியவர்கள் யாழ் நாடக நடிகர்களுடன் சேர்ந்து அநேக நாடகங்களை இலங்கையில் பல இடங்களுக்கும் சென்று நடித்து பெரும் புகழ் ஈட்டினார்கள்.

தென் இந்தியாவில் இருந்து வரும் நாடகக் குழுவினருடன் நடிகர்களைப் போட்டா போட்டிக்கு நடிக்க வைத்து இந்திய நடிகர்களே யாழ் நடிகர்களின் திறமையைக் கண்டு வியந்தார்கள். நெல்லியடி கிருஷ்ண ஆழ்வார் சக்களத்தி போராட்டத்தில் சுபத்திரை வேடம் தாங்கி இந்திய நடிக பெண்களுடன் போட்டி போட்டு நடித்து பெரும் புகழ் ஈட்டினார். இதே போல் பபூன் செல்லையாவின் நடிப்புத் திறமைக்கும், நாடகத்தின் பாத்திரத்துக்கு ஏற்ப கற்பனையில் பேசும வசனத்துக்கும் ஈடு நிக்க முடியாது, சில இந்திய நடிகர்கள் பின்வாங்கி விட்டார்கள். இதேபோல் யாழ்ப்பாணத்தில் பல கலைஞர்களை நாடகத்தில் ஈடுபடச் செய்த பெருமை துரைராசாவையே சாரும்.

ஆர்மோனியம் சோமசுந்தரம் அவர்கள் சிறு வயதில் ஆர்மோனியம் வாசிக்கும் திறமையை உணர்ந்த. ஆர்மோனியம் வாசிப்பதில் இந்தியாவில் பெரும் புகழ் ஈட்டிய தேவுடு ஐயர், யாழ் தகரக் கொட்டகைக்கு வந்து ஒரு நாடகத்தில் நடிக்க வேண்டியபடியால் சோமசுந்தரத்தை தேவுடு ஐயருக்காக நாடகத்தில் ஆர்மோனியம் வாசிக்கச் செய்தார். சோமசுந்தரத்தின் வாத்தியத் திறனைக் கண்டு தேவுடு ஐயர் வியப்படைந்து பாராட்டினார்.

அக்காலத்தில் முதன் முதலில் பேசாத சினிமாப்படம் யாழ்ப்பாணத்தில் முற்றவெளியில் திரையிடப்பட்டது. பின்னர் தகரக் கொட்டகையில் பேசாத சினிமாப் படங்கள் திரையிடப்பட்டன. பேசாத சினிமாப் படம் திரையிடப்படும் பொழுது சினிமாப்படத்தின் கதையைக் காட்சிகளுக்கேற்பப் படத்தைப் பார்க்கும் மக்களுக்குத் தமிழில் கூறுவதற்கு ஒருவரை நியமித்து, தகரக் கொட்டகையில் ஓர் உயர்ந்த ஆசனம் அமைத்து அதில் அவர் அமர்ந்து பெரும் சத்தத்தில் கூறுவார்.

இதே போன்றே கலையை வளர்ப்பதற்குத் துரைராசா அவர்கள் தகரக் கொட்டகையில் அளப்பரிய நடவடிக்கை எடுத்துச் சேவை செய்தார். ●


மல்லிகை

**புதிய ஆண்டுச் சந்தா**

1991-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து புதிய சந்தா விபரம் பின் வருமாறு:

தனிப் பிரதி ரூபா 10-00

ஆண்டு சந்தா ரூபா 100-00

(ஆண்டுமலர் தவிர,
தபாற் செலவு உட்பட)

தனிப்பிரதிகள் பெற விரும்புவோர் தகுந்த தபாற் தலைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

மல்லிகை

234 B, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

# நினையா நினைப்பும் நெஞ்சத் தவிப்பும்

கல்வயல் வே. குமாரசாமி

ஐஞ்சு வருஷம் சவுதி அவர்போய்
இருக்கும்.
பிஞ்சு காய் எல்லாம் பெருத்து
கனியாகி
எத்தனை சம்பவங்கள் இங்கே எவர் எவர்க்கோ
சத்தம்போடாமல் நடந்து முடிஞ்சுது.
நிம்மதியாய்க் கூடி இருக்க மனம்
விரும்பும் செம்மறி நெஞ்சு
இந்நினைப்புக்குப் பின்னாலே
அர்ப்பணமாய் ஓடி
அலைபாஞ்சு கொந்தளிச்சு
இம்மியளவும் அறிவுக்கிசையாமல்
தாளிச்ச வாசனை வாயூற வைக்குது.
கோழி விறாந்தையிலே
கேருது முட்டையிட
அம்மா!
படுக்கிற பாடுகளை ஆர் அறிவார்
அண்டங்காகம் விண்ணை ஆராய்ந்து தேடுது
கண்டறியாத உழைப்பு
உந்தக் காசுகளைக் கொண்டு வந்து
இங்கென்ன?
குடிபோன — கர்ப்பூரச் சரையை வைத்து
தெய்வத்தைத் ஏமாற்றி
என்ன தவம், சிவம், விரதம்
சரிவரா இக்காலம்
கைவிடு மோனை
நீ கண்டதைத் தின்டால்தான்
உய்ய முடியும் 'ஆம்'

ஊர் ஒத்த சித்தாந்தம்
சாம்பல் குளிக்க உதறித் தன்நிறமும் மாறிவந்து
சாம்பல் குளிச்சிட்ட முட்டை:
சைவ முட்டை.
சாப்பிட்டடாம்
ஏம்பலிக்க வைக்கும் இனிச்சகதை சொல்லுகிறார்
எத்தனை நாளாகப் பத்தியம் காக்கிறன்
குத்தல் கதை சொல்லிக் குடலின் பலம் பார்த்தா[(ல்)
மத்தின்றி வெண்ணெய் மணிதிரளும்
என்று புகத்தும்.
புறணி சொல்லும் பட்டாளம்.

உத்தியோகம் சவுதி
ஊர் சொன்ன மந்திரத்தின் சக்தி
கலியாணம் ஓர்மாதம் கொண்டாட்டம்
பெண்டாட்டி நான் இங்கை
பிளேன் ஏறி மீண்டும் அவர்
இன்று வரை உழைப்பு
இங்கோ மருந்தில்லை பித்தம் தெளிய
மனம் வாந்தி எடுக்கிறது
சொத்துச் சுமந்த உடல் சோம்பல் முறிக்கிறது
தாலிக் கொடி காப்பு சங்கிலி அறுபட்டு
கூலி மூட்டும் பத்தாயிரம் கொடுத்த நெக்லஸ்
வைரக்கல் தோடு வளையங்கள்
வைச்சிருந்தேன்
வயிறு பசித்தாலும் வாய்திறக்க ஏலா (து)
உயிர் வற்றும் ஆசை உசுப்பி எடுக்கிறது.

சாம்பல் குளிக்கவந்த கோழி உதறுகுது
நாம்பன் கயிறு அறுப்பன் என்று மறுகுது
ஆம்பிளை இல்லாத வீடும் ஒரு வீடே!
கண்ணை உறுட்டுகுது கண்மூடிக் கொண்டிருப்பம்
கண்மூடிக் கொண்டிருக்கக்
கதவு திறந்து வந்த
சண்டாளன் நாய் ஒன்று நுழைத்துள்ளே தலையை
மாட்டிக் கொண்டோடி மதிலோடு மோதுகுது
குடிதண்ணீரோடு குடமும் தொலைஞ்சுதையோ!
மீன்கொத்தி உச்சித் துலாவிலே காத்திருக்க
ஆரென்ன செய்ய முடியும்
நட உயர்ந்த வேலி இருந்தென்ன
வேதாந்தம் பேசியென்ன?

# 'சந்தன மேடை' யில்

# சண்முகலிங்கன்

— முருகையன்

"... ...ஆனால், பழந்தமிழ்க் கவிதையோ இயல்பாகவே தொடர்ந்து செல்லும் ஒரு வகை அநாமதேயப் பண்பு வாய்ந்தது. ஆக்கியோன் யாவன் என்று அடையாளம் காணக்கூடிய இடங்களிலும் ஒரு காலத்துக்கு அல்லது ஓர் ஆசிரியனுக்கு உரிய உத்தி உபாயங்கள் தலைதூக்கி நிற்கின்றனவே தவிர ஒரு தனி மனிதனின் குரலோ, சைகைகளோ, உணர்ச்சி விநோதங்களோ முனைப்புப் பெறவில்லை"

மேற்கண்டவாறு விமரிசகர் சி. வி. இராஜசுந்தரம் கட்டுரையொன்றில் குறிப்பிடுகிறார். பேராசிரியர் கைலாசபதி 'தன்னுணர்ச்சிக் கவிதைகள்' என்ற பெயரிட்டுப் பேசும் வகையான ஆக்கங்கள், நமது மரபிலே குறைவாய் உள்ளன என்னும் ஓர் ஆதங்கமே இராஜசுந்தரம் அவர்களின் கருத்துரையின் அடியில் புதைந்துள்ளது என்று கொள்ளலாம். நமது மரபின் பிரதான ஓட்டம் அவ்வாறு இருந்தாலும், அந்த ஓட்டத்திற்குப் புறநடைகளும் அவ்வப்போது தோன்றியுள்ளன.

தனி மனித உறவுகளின் நிலைப்பாடுகளையும் உணர்வு நிலைகளையும் பாடுவதிலே சிறப்பார்வம் கொண்ட படைப்பாளியாக என். சண்முகலிங்கனை நாம் எடுத்துக் காட்டலாம். 'நாகலிங்கம் நூலாலயத்தின்' முதலாவது புத்தகம் 'என் அப்பாவின் கதை' என்பது. தமது தந்தையின் பிரிவு தந்த மனவிளைவுகளை அந்த முதலாவது நூலிலே அவர் வெளிக்கொணர்ந்தார். அதனைத் தொடர்ந்து அவர் நமக்கு வழங்கியிருக்கும் கலைப் படையல் 'சந்தன மேடை' என்னும் கவிதை நூல் ஆகும். இதில் இடம் பெற்றுள்ள ஆக்கங்களிலும் அவர் நமக்கு மிகவும் நெருக்கமான உறவின் முறையோரை மையமாகக் கொண்ட எண்ணக் கனிவுகளை இழையோட விட்டிருக்கிறார். அப்பா, அம்மா, அக்கா, தங்கை, துணைவி — இவர்களின் சுற்றுவட்டத்திலே தொடங்கி, நண்பர்கள், ஊரார், உலகத்தார் என்று விரிந்து செல்லும் விதத்திலே கவிஞரின் அக்கறைக்குரிய களங்கள் பல்வகைப்பட்டு அமைகின்றன.

தன்னுணர்ச்சிப் பாட்டுகளை இயற்றுவதில் இவர் ஊன்றிய கவனம் செலுத்தியுள்ளார். அதனோடு கூட இசையோசையுடன்

இணைந்த விதத்திலேதான் இவருடைய கலையாக்க எழுச்சி உந்தல்கள் செயற்படுகின்றன என்பதும் மனங்கொள்ளத் தக்கது. இது இயல்பானதுதான்; ஒரு விதத்திலே பார்க்கும்போது தவிர்க்க முடியாததும் கூட!

ஏனென்றால் சண்முகலிங்கன் சமூகவியல் ஆய்வாளர், எழுத்தாளர், கவிஞர் என்றெல்லாம் சொல்லப்படத் தக்கவராயுள்ள அதே வேளை, அவர் ஆக்க இசைக் கலைஞராகவும் உள்ளார்.

''கண்ணீரைத் துடைத்துக் கொள்ளம்மா...
அம்மம்மா......
கண்ணீரைத் துடைத்துக் கொள்ளம்மா
உன்னுடைய பிள்ளைகள் நாம்
உனக்காக இருக்கையிலே......
கண்ணீரில் கரைவதேனம்மா......''

என்று அவள் பாடத் தொடங்கும்போது பாடலுடன் சேர்ந்தே இசையமைவும் உருப்பெற்று விடுவது தெளிவாகத் தெரிகிறதல்லவா? இசையின் கதியுடன் இதய உணர்வும் ஒன்றி நடைபோடுவதும் வடிவாகப் புலப்படுகிறது அல்லவா? சண்முகலிங்கனின் ஆக்கங்கள் பலவற்றிலும் இந்த இசைவையும் ஒன்றலையும் நாம் இலங்கண்டு கொள்ளுகிறோம். இந்தக் கவிஞரின் தனித்தன்மைகளுள் இதுவே முதன்மையானது என்று சொல்லத் தோன்றுகிறது. அதே வேளை, சண்முகலிங்கன் இசை உருப்படிகளைக் 'கவனஞ் செய்யும்' ஒரு சாதாரண சாகித்திய கர்த்தா என்ற வரம்புக்குள்ளும் அடங்கிவிட மாட்டார். ஏறகனவே வகுக்கப்பட்ட இராக தாளங்களுக்கும் மெட்டுக்கும் பொருந்தி வரும்படியாக, எவையேனும் சில சொற்களைக் கோவை செய்து தரும் சாகித்திய கர்த்தாக்களுக்கும் சண்முகலிங்கனுக்கும் வெகுதூரம். இவர் புதியனவான இசைக் கோலங்களைக் கற்பித்துப் படைக்க வல்லவர். இசைக்கோலங்களின் பிறப்பாக்கத்தோடு கவிதைக் கலையின் சுவாச ஒலியையும் இணைவிக்கும் வித்தை தெரிந்தவர். அதனாலேதான் அவர் பாடுவார்

',வான் மீது விளையாடும் மேகங்களே
இது
நான் பாடும் புதிய பாடல்
கேளுங்களேன்''

''வான் செல்லும் இடமெல்லாம்
நீர் செல்லாம்
வளமான உலகங்கள் தமைக் காணலாம்
நான்
இங்கு இருந்தென்ன நலம் காணுவேன்
நலமான ஒளி காண துணை நாடினேன்''

ஆனால், சண்முகலிங்கனின் எல்லாப் பாட்டுக்களிலும் இசையின் நாதம் முதன்மை பெறுகின்றது என்று நான் சொல்லமாட்டேன். சண்முகலிங்கன் மானுடவியல் வெளிச்சத்திலே 'எழுத்தறி மரபு', 'வாய்மொழி மரபு' என இருவகைப்படுத்தி கவிதைக் கலை மரபைப் பார்க்கும் ஆற்றல் பெற்றவர். செவிவழி மரபில், கவிதையின் 'ரிஷி மூலம்' இசையே என்னும் கருத்தையும் தெரிந்து விளங்கிக் கொண்டவர். ஆயினும் இந்த இடத்திலே ஒன்றைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். செவியாற் கேட்கப் படுவது பாடல் மாத்திரமன்று; பேசலும் செவிவழி வருவதே. உண்மையைச் சொல்லப் போனால், பாடலைவிடப் பேசலைத்தான் நடப்பியலிற் பெரிதும் பயில்வது. வாழ்க்கையிலே ஒருவர் எந்த எந்தத் தருணங்களிலே பாடுகிறார்? எந்த எந்தத் தருணங்களிலே பேசுகிறார்? இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடை காண முற்படும் போது செவிவழி மரபிலே பாடலும் பேசலும் பெறும் அழுத்த வேறுபாடுகள் பற்றித் தெளிவு பெறலாம். தமிழ்க் கவிதையில் மட்டுமன்றி எல்லா மொழிக் கவிதையிலும் பூர்வீக நிலையிலே இசையும் இயலும் பிரிக்க இயலாத வண்ணம் ஒன்றியே இருந்தன. எனினும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், 'இயற்பாட்டு' (கவிதை) என்றும் 'இசைப்பாடல்' (உருப்படி) என்றும் மெல்ல மெல்ல விலகிப் பிரிந்தன. பின்னர் இவை மாறி மாறி இணங்கியும் பிரிந்தும் இயங்கியல் நெறியிலே ஒன்றையொன்று வளப்படுத்தி வந்துள்ளன. 'செவிவழி' மரபின் உள்ளேயே இயல், இசை ஆகிய இந்த இரு கூறுகளின் ஊடாட்டத்தையும் பற்றி நாம் எண்ணிப் பார்க்கலாம். இவற்றுக்கும் 'எழுத்தறி' மரபுக்கும் இடையில் நிகழும் தாக்கங்களை இணைக்கும் பரிசீலனை செய்யலாம். சண்முகலிங்கன் படைப்புக் களத்தில் நின்றவாறே மேற்படி பரிசீலனையைப் பயனுள்ள விதத்தில் நடைமுறைச் செயல் வடிவில் நிகழ்த்தியுள்ளார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, பாடலோசையின் அடியாக எழும் கவிதைகளையே பெரும்பாலும் இயற்றத் தொடங்கிய அவர் பேசலோசையின் அடியாக எழும் தாளலயங்களை நோக்கியும் நகர்ந்திருக்கிறார். எண்பதாம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட ஆக்கங்களிலே இந்த நகர்வினை நாம் அவதானிக்கிறோம்

''சரஸ்வதி... லட்சுமி
ஆண்டவனே என்ற
பெயர்களுக்குக் குறைவு இல்லை.

பின்னை என்ன குறை......
கண்டுக்குளியில் 'அட்மிசன்' இல்லையா?
கவிர்சலாந்துக்கு 'விசா' இல்லையா?

... ''.......................
இன்னுமா...... அடிமைகளா......
எங்கே...... என்பீரோ......
ஆராய்ச்சி வேண்டாம்

அடுப்படிக்குச் செல்லுங்கள்

.......................

சுடுபவர்கள்...... வானத்தில் இல்லை
சுதந்திரம் பேசும் உங்கள் சுற்றத்தில் தான்!''

பேசல் ஓசையின் சூட்சுமங்கள் இந்த வரிகளிலே அங்கங்கு தலை காட்டுகின்றன. இல்லையா? அன்றாடம், நாளும் பொழுதும் நாங்கள் கதைக்கும் போது எழும் பேசல் ஓசை மட்டுமா சண்முகலிங்கனின் மூலதனம்? இல்லை; கூண்டிய நடனம், தேசிய நாடகம், இவைகள் எல்லாந்தான் சண்முகலிங்கனின் ஆக்கங்களுக்கு நெருப்புக் குச்சிகளாக உதவுகின்றன.

கவிதைகளின் நெருப்புக் குச்சிகள் எவையென்று பார்த்த நாம் அவற்றின் திரிகள் எவையென்பதையும் காண வேண்டும். கனவுகளும் காட்சிகளுமே நமது கவிஞரின் திரிகள். ''கனவுகளில்லாமல் காவியமில்லை'' என்று அவரே பாடுகிறார்.

''ஆனந்தமான அர்த்தங்கள் தேடி
அலைகின்ற பயணங்கள் தொடரும்
ஆனாலும் வாழ்வின் அர்த்தங்கள் யாவும்
அறியாத பொருளாகி மறையும்.........

.......................

கனவுகளே...... வாழ்வின் சிறகுகளே......''

இவை கனவுகள். அதாவது மனநிலைக் காட்சிகள். ஆனால் தனித்த வெளியில் நின்று மனநிலைக் காட்சிகளை மாத்திரமே பாடும் ஒருவர் என்று சண்முகலிங்கனை நாங்கள் கருதி விடுதல் கூடாது. ஊரிலும் உலகிலும் நடமாடி, தெருவில் உலாவி, திண்ணையில் இருந்து, நடப்பியல் வாழ்நிலைக் காட்சிகளையும் அவர் காணத் தவறுதில்லை. வாழ்நிலைக் காட்சிகளும் அவருடைய கலையாக்கங்களின் திரிகளாகின்றன.

''வாழ்வின் இதழ்கள்'' என்ற கவிதையில் அரும்பின் மலர்ச்சி தொட்டு கடைசி இதழின் கருகல் வரையிலே மெல்ல மெல்ல ஒரு காட்சியைத் திரை நீக்கம் செய்து காட்டுகிறார். வாழ்நிலைகளின் நுண்சுருக்கப் படப்பிடிப்புத்தானோ இது?

மழை வேண்டும் என்னும் பிறிதொரு படைப்பினைக் காண்போம். வரண்ட நம் நிலம் குளிர மழை வேண்டும் என்னும் அங்கலாய்ப்புடன் கவிஞர் தொடங்குகிறார். என்ன செய்யலாம் என்ற கேள்வி அடுத்து எழுகிறது.

"காடுகள் வளர்த்தல்
கூடவே
கற்பனை வளர்த்தல்
கொடும்பாவி எரித்தல்
காவியம், வசந்தன்
பிரித், யாகம்
மழைவர வழிசெய்யுமா?"

அல்லாவிடில் மேற்கிலிருந்தோ, கிழக்கிலிருந்தோ நிபுணர்கள் வந்தால் காரியம் நிறைவேறுமா? அம்மா சொல்லுகிறாராம்

"எங்கள் வாழ்வின் வெளிச்சம் தடுத்த
வினையின் பயனே மழையின் பொய்ப்பு"

என்று, இதற்கிடையே ஒரு கேள்வி— மழையும் வினையின் பயனோ?

"எப்படியோ
எங்களுக்கு மழை வேண்டும்
வரண்ட நிலங்கள் மட்டுமல்ல
இருண்ட இதயங்களும்
இளகிட மழை வேண்டும்
இதனைத் தடுப்பது எது என்றாலும்
அதிலே இடி விழ வேண்டும்
அந்த இடியில் மழை வரவேண்டும்"

இடி விழவேண்டும் என்ற கோரிக்கை, எடுத்த எடுப்பிலே எம்மைத் திடுக்கிட வைக்கிறது. இரக்கமில்லாத சாபமாக ஒலிக்கிறது; கடூரமாக — கொடுமையான ஒரு வேண்டுதல் போல அது தெரிகிறது. ஆனால், சற்று நிதானித்து அந்த இடி ஏன் விழவேண்டும் என்பதைக் கவிஞர் விளங்கவைக்கும் முறையை ஆழ்ந்து உணரும் போது நமது திடுக்காட்டம் திருப்தியாக மாறுகிறது.

மழை வேண்டும். மழை பெய்வதைத் தடுப்பதாக ஏதும் இருக்குமானால், அந்தத் தடையின் மீது இடி விழ வேண்டும். இடி விழுந்தால் அந்தத் தடை அழிந்து போக வேண்டும். 'அந்த இடியில் மழை வரவேண்டும்' என்று கவிதை முடியும் போது கவிஞரின் வேண்டுதல் கொடுமையானது அல்ல; அது குளிர்மையானது என்று தெரிந்த நாம் நிறைவுகொள்கிறோம்.

இவ்விதமான திகைப்பும், திகைப்பு — நீக்கமும் கவிஞர்களின் கையிருப்புகளில் சேர்மதியானவை தானே! 'முரண்போலி' என்று இதனை நாம் குறிப்பிடலாம்.

வரண்ட நிலங்களை வளமுள்ளவாக, சண்முகலிங்கனின் இடி முழக்கமும், அந்த முழக்கங்களைத் தொடரும் மழையும் அமைந்து நலன் தரட்டும்; நயம் தரட்டும்.

## கடிதங்கள்

ஜனவரி — 93 இதழ் படித்தேன். எனக்குள்ளே ஓர் ஆச்சரியம். அதை முதலில் சொல்லி விடுகிறேன். பத்து ரூபாய் விலைக்கு மல்லிகையை விற்க எப்படி உங்களுக்குக் கட்டுபடியாகிறது? இந்தக் காலத்தில் இது சாத்தியமான காரியமா? வடகோவை வரதராஜன் கதை விவரிப்பு' பாத்திரப் படைப்பு நன்றாக இருந்தது. கோப்பாய்ப் பிரதேசத்தை அப்படியே தனது படைப்பில் கொண்டு வந்து விட்டாரே!

உங்களுடைய ஒரு நாள் பொழுது வேலைத் திட்டத்தைப் பூரணமாக உணர்ந்தவர்களுக்கு நீங்கள் எப்படிப்பட்ட உழைப்பாளி என்பது தெளிவாகவே புரிகிறது. ஒரு நாளில் எத்தனை எத்தனை வகைப்பட்ட மனிதர்களைச் சந்திக்கிறீர்கள்! நீங்கள் அதில் குறிப்பிட்டது போல, வேறெந்த எழுத்தாளனும் தினசரி இத்தனை பேர்களையும் சந்திப்பது என்பது இயலாத காரியம் தான்.

கவிஞர் சோ. பவின் கவிதை நெஞ்சத்தைத் தொட்டது. பெண் நிலை வாதத்தை எத்தகைய நுட்பத்துடன் சொல்லியிருக்கிறார் அவர்.

மல்லிகை வெளிவந்ததும் படிக்க வேண்டுமென்ற அவா என்னுள் தலைதூக்கியவுடனேயே முழுவதையும் படித்து முடித்து விடுவேன். வரதரின் 'தீ வாத்தியார்' சுவையாக இருக்கின்றது. சோ. கிருஷ்ணராசாவின் ஓவியம் பற்றிய கட்டுரையை இன்னமும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கலாம்.

மானிப்பாய், செல்வி க. கல்யாணி

---

முன்னர் போல, நாட்டின் பிற பகுதிகளில் வாழும் எழுத்தாளரின் படைப்புகளை மல்லிகையில் சமீப காலங்களாகக் காண முடியவில்லை, என்ன காரணம்? இலக்கிய விவாதங்களை ஆரம்பியுங்கள். அதன் மூலம் புதிய பரம்பரையினர் பழைய இலக்கிய விவகாரங்கள் பற்றி அறிய முடியும்.

சென்ற இதழில் அனு வை. நாகராஜன் ஒரு புதிய விசயத்தைப் பற்றிக் கட்டுரை எழுதியிருந்தார். கர்நாடகாவிலும் மராட்டியத்திலும் சூடு பிடித்து வரும் 'தலித்' இலக்கியம் பற்றி அவர் எழுதியிருந்தார். சமீப மாதங்களில் 'சுப மங்களா' மாத இதழில் இது பற்றிய பேட்டிக் கட்டுரையை நான் படித்திருக்கிறேன். அதன் அடிச் சுவட்டிலேயே அக் கட்டுரை அமைந்துள்ளது. ஈழத்தில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகவே ஒடுக்குபவன்— ஒடுக்கப்படுபவன் என்ற ரீதியில் இலக்கியங்கள் படைக்கப்பட்டு வந்துள்ளன. எடுத்துக்காட்டாக மறைந்த எழுத்தாளர் டானியல் தனது முதல் நாவலுக்குப் 'பஞ்சமர்' என்றே பெயர் சூட்டியுள்ளார். இதையும் வரலாற்றுப் பின்னணியில் நாம் நமது கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். 'தலித்' பெயர் சூட்டிக்

கொள்ளாமலே தலித் இலக்கியங்கள் இங்கு படைக்கப்பட்டன என்பதே உண்மை. ஆரோக்கியமான இலக்கிய விவாதங்கள் நடைபெறுவது வாழும் இலக்கியங்களுக்கு ஊட்டம் ஊட்டுவதாக அமையும். இந்த விவாதம் நடக்கும் காலத்தில் டானியல் அவர்கள் உயிருடன் இல்லையே என்பதுதான் எனது மனக் கவலை. இது சம்பந்தமாக அன்னாரது கருத்துக்கள் மிகவும் தேவைப்பட்டிருக்கலாம்.

இன்று சுலபமாகக் கருத்துச் சொல்லி முடித்துவிடலாம். டானியல் போன்றவர்கள் பேனா பிடித்த காலத்தில் அவர்கள் பட்ட துயரமான இலக்கிய அனுபவங்களை அவர்களது வாய்மொழி மூலம் சொல்லக் கேட்டவர்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஈழத்து இலக்கியத்திற்கு அவர்கள் புதிய பரிமாண வடிவந் தந்துள்ளார்கள் என்பதை யாருமே மறுக்க மாட்டார்கள். இப்படியானவர்கள் வாழும் போதே தூற்றப்பட்டார்கள். ஆனால் காலம் இன்று அவர்களை மதித்து அவர்களது கருத்துக்களுக்குக் கௌரவம் தரும் வேளையில் டானியல் உயிரோடு இல்லையே என்ற கவலைதான் எனக்கு ஏற்படுகிறது. காலம் சரியான எடைபோடும் கருவி. நல்ல இலக்கியம் எது? நச்சு இலக்கியம் எது என்பதைக் காலமே சரியாக இனங் காட்டிவிடும் என்பது திண்ணம்.

அச்சுவேலி, அ. செல்வராசா

---

மல்லிகையில் எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. மல்லிகை போன்ற தரமான ஓர் இலக்கிய ஏட்டில் இப்படி எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட வேண்டும். இந்தச் சூழ்நிலையில் இப்படியான ஒரு சஞ்சிகையை ஒழுங்காக நடத்துவதே ஒரு பெரிய விஷயம். பாராட்டுக் கூட்டங்கள், இலக்கிய விழாக்கள் பற்றிய செய்திகளைப் படிக்கக் கூடியதாக இருப்பது தகவல் அறிவதற்கு வசதியாக இருக்கிறது. வெளிப் பிரதேசத்து எழுத்தாளர்களின் படைப்புகளைச் சமீப காலமாக மல்லிகையில் பார்க்க முடியவில்லை. மாறாகச் சென்ற இதழில் முஸ்லிம் எழுத்தாளர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் எழுதிய கதையைப் போட்டிருந்தீர்கள். இதையிட்டு முழுத் திருப்தி எனக்கு. முன்னர் போல அடிக்கடி கொழும்பு செல்ல முடியாத ஏக்கத்தை உங்களது எழுத்துக்களில் படித்தேன். பிரயாணமும், தொடர்பும், சந்திப்பும் ஓர் எழுத்தாளனுக்கு அதி முக்கியம். ஒரு சஞ்சிகையாளனுக்கு எல்லாவற்றையும் விட முக்கியம். உங்களது தொடர்பு அனுபவங்கள் எமக்கெல்லாம் இலக்கிய ரசனையாகவல்லவா இருக்கும். எதற்கும் நாங்கள் பின் பலமாக நிற்போம் என உறுதியாக நம்பலாம்.

நீங்கள் அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தை ஆத்மார்த்திக உணர்வென்பது. அந்த நெஞ்சத்து உணர்வுதான் எங்களை உங்களுடன் மல்லிகையுடனும் இணைத்துப் பிணைக்கிறது. ஒவ்வொரு தடவையும் மல்லிகையைப் பிரித்துப் படிக்கும்போது நீண்ட நாட்கள் பழகிய நண்பனைப் பார்த்துக் கதைப்பது போன்ற உணர்வே என் நெஞ்சில் ஏற்படுகிறது. உங்களது உழைப்பு மாத்திரமல்ல மல்லிகைக்கு நீர்; பசளை. எமது பிரார்த்தனையும் தான் காரணம்.

இணுவில், க. கங்காதரன்

# மனிதரே போல..

செ. பொ. சிவனேசன்

"பூனைக்கும் மனிதனுக்கும் என்ன உறவு? எது அடிப்படை? புரிந்து கொள்ளவே முடிந்ததில்லை! ஆதியிலும் ஆதியில் ஏதாகிலும் இருந்திருக்குமோ? ஐதீகங்கள் தான் ஒன்றுமில்லையே? புராணங்கள், இதிகாசங்களோ எள்ளளவும் கூறவில்ல. ஒருவேளை, ஒரே குடும்ப விலங்கினமோ? உயிரியல் நூல்கள் ஒவ்வொன்றினுள்ளும் புகுந்து திரும்பியாயிற்று; ஒருவித ஆதாரமுங் காணோம்! டார்வின் கூட குரங்கை மட்டுந் தானே?...!

அட, பிறகு ஏன் மனிதராய்ப் பிரமை காட்டுகிறது பூனை! ஒவ்வொரு நடவடிக்கையிலும் தான்!.. ஒவ்வொரு அசைவிலும்?...

வந்து சேர்ந்த புதிதில் ஒட்டவே மறுத்தது. தூரத்தில் நின்று மிரள மிரள — கொடுவாளுடன் நிற்கும் கொலைகாரனைப் பார்க்கிறதாய்... பக்கத்தில் போனாலே ஒவ்வாது. ஒரே தாவல்; விரலும் விடமுடியாத இடுக்குகளுள்ளால் "மியாவ்........" சாப்பிடவும் வராது. தொண்டை கட்ட வேண்டியதுதான். குறிப்புணர்ந்து, கீழே வைத்துவிட்டு மறைவாய் ஒதுங்குவது: மெல்லத் தலைநீட்டும்; ஒவ்வொரு அடியும் நம்பிக்கையீனத்துட் புதைந்து, கனதியாய், நாலுபக்கமும் பார்வை — பாதுகாப்பை உறுதி செய்தல்.

பீதி நிறைந்த சீவன்.

## 2

பார்த்த நொடியிலேயே பற்றிக் கொண்டது. வெளிர் மஞ்சள், செம் மஞ்சளில் வரிகள், பருத்திப் பஞ்சாய் உடல்வாகு. எட்டிப் பிடித்து வருட உந்தியது. பொதுவாகப் பூனைகள் என்றாலே அருவருப்பு. கிட்டவே அணுக விடுவதில்லை: இதன் வசமோ கைகள் துறுதுறுத்தன.

"இதாற்றை?"

"எங்கடைதான். தாய்ப் பூனையுஞ் சரியா இதேமாதிரி: இரண்டு குட்டிதான் போட்டது. ஒண்டை தெரிஞ்சாள் கொண்டு போட்டுது"

ஒரு பழப்பாக்கு — உருட்டி, துன்ளி, உருட்டி — பந்தாம்: ஆசை ஆசையாய், ஆர்வம் ஆர்வமாய் உறைந்தது பார்வை.

உறவினர் திகைத்தார்கள். "ஐயோ கேட்டுப்போடாதை

யுங்கோ! தாயெ அகத்தவேணும், இதை வளக்கப்போறம். எத்தினயோபேர் கேட்டுங் குடுக்கேல'.

கெஞ்சல், மன்றாட்டம் வளைத்தெடுக்க வலிமையாய் இருந்தன.

மனம் நிறையப் பாசம். அடைமழையென்ன அடைமமை? கெட்டுது. ஆனால் பதிலன்பு? ஏமாற்றியது — முகத்திலடிப்பது போல் நடந்து கொண்டது.

எரிச்சல் எரிச்சலாய்ப் பற்றும். ஏன் விரோதியாகவே பாக்குது? சனியன்! ச்சாய் பாவம். மனிசரப் போலவே அஞ்சறிவுச் சீவன். என்ன விளங்குது? நட்பப் பகையப் பகுத்தறியவே தெரியும். நான் ஒரு மடப்பயல்! சரி இப்ப மாத்தியெடுக்க வழியென்ன? ...ஆங், வாயில்லாப் பிராணி. எதுவும் நடத்தையால தான் விளங்கும்: நோழமை உணர்வுந்தான்.

கிடைத்த ஓய்வுகளெல்லாம் பூனைக்குட்டியுடன் துரத்தித் திரிவதும், பிடிக்க முயல்வதுமே பொழுதுபோக்கு. முதல் மூன்று நாட்களும் தோல்வி. ஏமாளியாக்கும் விதத்தை நன்றாகவே அறிந்திருந்தது. வேறு உத்தியைத் தேட வேண்டியதாயிற்று.

கிடைத்தாயிற்று:

பூனையாகவே மாறவேண்டும் — தூங்கும்போது பின்பக்கமாகப் பதுங்கி நடந்து, இட்டியவுடன் ஒரே அமுக்கு.

3

வெற்றிவாய்ப்புக் கைகூலுக்கியது. பாவனைக்குதவாத பொருட்களைப் போடும் மூலையொன்றுண்டு. உடைந்த நாற்காலியில் அரைவட்டப் பிறை—சுருண்டு நல்ல தூக்கம்; உத்தியின் உச்சம் கைகள் மூஞ்சைக்கு நேராய் ஒன்று. மற்றையது முதுகை நோக்கி — படலை கட்டியாயிற்று. திடுக்குற்றது. தப்பிபோட எத்தனமே இல்லை. பதுங்கிப் போனது. கண்களை மட்டும் மூடிமூடித் திறந்தது. அப்பிராணியாய் 'சரணடைந்தேனப்பா' என, இப்பிடியுமே பூனைக் குணம்! கண்டதில்லை! கேள்விப்பட்டதே இல்லை! எவ்வளவு பெரிய கள்ளத்தனம். பெரிய சக்தியிட்ட மாட்டுப்பட்டாச்சு! தப்பவே ஏலாது: பரிதாபத்தைச் சம்பாதிக்க வேண்டியதுதான். தந்திரந்தானே? இதிட்டை என்னெண்டு? நரிக்குத்தானே தந்திர புத்தியாம்? பூனைக்கு? அதில என்ன, ரண்டும் மிருகம். ஒரே பாதி. மனிசர், மனிசரிட்டையும் இப்பிடிக் குணம்?... வாயிலையே வாள் பிடிச்சு விசுக்கிற விசுக்கெண்டாலோ? அதிலையும் வலிமை குறைஞ்சதுகள் ஆப்பிட வேணும்...... பெரிய வல்லரசு தான். வலிமை கூடினவன் வந்தா...... சண்டித்தனக்காரன் முலுகினா... . கொலைகாரன், கொள்ளைக்காரனைக் கண்டா... பிறகென்ன? அவதாரங்கள் தான் மறுகன்னத்தையும் காட்டத் தயார்!

4

புரிந்துணர்வை ஏற்படுத்தப் படாதபாடு. பிடிப்பது; மடியில் வைத்து உணவூட்டுவது; அவ்விதமே தடவிக் கொடுத்து தூங்கவும் பழக்கியாயிற்று.

ஒட்டுவது என்ன? ஒட்டிய ஒட்டைப் பிரிக்க முடியாதபடி வளையவே வந்தது. ஏதாவது அவசரத்திற்கு வேகங்காட்டினால் ரோயிற்று ஓடிவரும். கால்களுக்கிடையில் புகுந்து இடறவைக்கும். நேசமாய் ஒதுங்கிவிட்டு நடப்பதுதான்:

பதிலன்பு அபாரம்.

ஆனால்.........

ஆரம்பித்துவிட்டது ஏதோ சதிகாரம்!

கொஞ்சம் ஓய்வெடுக்க வென்று நாற்காலியில் சாயவே வேண்டாம். குதூகலம். காலடிக்கு ஓடிவரும்; துள்ளிக்குதிக்கும்; கைப்பிடிச் சட்டத்திற்குத் தாவும்; மடிக்குத் தாவும்; தோளிற் தாவி தலைமுடியைக் கிண்டிக்கிளறும். இந்த விளையாட்டில் என்ன சருவாட்டுச் சுவையோ? ச்சாய்... வேப்பெண்ணெய்! பிடிச்சுக் கீழே விட்டால் தான் என்ன. தன்ர வழியிலை போகப் போகுதே? திரும்பவும் தொந்தரவு.

எப்போதாவது போட்டுக் கொள்வது அது 'தொளதொள' மேற்சட்டை. பகுந்து கொள்ளும். நையாண்டி செய்யுதோ?...... மனிசக் குணம்! பூனைக்கு என்னெண்டு......

உள்ளே கிடந்த வயிற்றில் விறாண்டும்.

எந்த வேலையிலும் பொறுமையாய் ஈடுபட வகையில்லை. குறுக்கீடு! ஒரே இடையூறு! படுக்கையிற் சாய்ந்தால் தலைமாட்டில். காதுக்குள்ளே ர்ர் ர்ர்... ர்ர்...' ச்சி... என்ன அரியண்டம். சுவாசச் சத்தந்தான். ஆனால் நித்திரை.

தள்ளிவிட்டாலும் போகாது. மீண்டும் தலைமாட்டில் எட. கால்மாட்டுக்கையாவது போய்க் கிடக்கவேண்டியதுதானே மூஞ்சேலைத்தான் தேய்க்க வேணுமே?

நிம்மதி பறிபோய் விட்டது!

அதுக்கென்ன செய்யிறது? குட்டிப் பூனை விளையாட்டுத்தனம் — ஒருவித அன்புத் தொல்லை. இதைப்போய் பெரிசா......

ஆனால். பலாபலனோ உடலை வருத்தியது. வயிற்றில் சிறுசிறு காயங்கள். இடைக்கிடை சுண்டி வலி. ச்சாய்...... இவ்வளவு இடம் குடுத்திருக்கக் கூடாது, அடிச்சுப் பழக்கியிருக்க வேணும். ஆனால், ஏன் மனம் வருகுதில்லை.

எங்கே பழையபடி விலத்திப் போயிடுமோவென்று...... ஏன் பயமா இருக்கு. பதிலன்பைக் காட்டாமல் விட்டிடுமெண்டு... ச்சீ... இந்த அன்பாலைதானே இவ்வளவு தொல்லை. ஆனால் ஏன் முறிக்கேலாது? எவ்வளவு குரூர புத்தி! அடுத்தவரைத் துன்புறுத்தி இன்பங் காணுற சேடிஸ்தனம். அன்புக்கு அடங்கிப் போனால் அடிமையெண்டு எண்ணமோ? என்ன செய்தாலும் சகிச்சுப்போக வேணும். உலகம் வாழுறதே எனக்காகத்தான் எண்டமாதிரி... எசமான மனோபாவம்! இதென்ன மனிசர் மாதிரி?......

மனிசர்—

''வாருங்கள் ஒருக்கால் ரவுணுக்குப் போட்டு வருவமே''

''சங்கக்கடையில சாமான் குடுக்கினமாமே?... விசாரிச்சுக் கொண்டு வரேணுமே''

''பாயங்குக்கு ஒருக்கால் போகவேணும்''

கனக்க, ஊர்த் தொளவாரம் ஊரிப்பட்டது. ஒண்டுக்கும் மறுப்பில்லை — அன்பு முறிஞ்சு போம் எண்ட பயம். அதாலை தானே ஆக மட்டமா. ஓம்...... பாசத்தலணையில பலகாரஞ் சுடுகிற கூட்டமொண்டிருக்கு. இஞ்சரும், எங்கட வேலியெல்லாம் பிரிஞ்சு போச்சு. கட்டப்

போறன் கொஞ்சம் ஒத்தாசை பண்ணேலுமே? இப்பிடியும் கனக்க. எல்லாத்துக்கும் தலையாட்டி எண்ட துணிவுதானே.

ஏலுமே? அதென்ன ஏலுமே? வெறுஞ் சம்பிரதாயம் 'செய்து தா' அதுதான் உண்மை. என்ன அதிகாரம். அவனவனுக்குஞ் சொந்தச் சோலிகள் இருக்குந் தானே. ஒரு உணர்வு வேண்டாமே. ஓயாத் தொல்லை. ஏதாவது அவசரம் வந்து. காரணத்தைச் சொல்லியும் மறுக்கேலாது. கோவம்! 'உதென்ன உன்ர வேலை? என்ர வேலைய முதல் முடி' எண்ட மனோபாவம். அப்பிடியும் மறுத்தா, 'உதிட்டைக் கேட்டுப் புண்ணியமில்லை. ஆவத்துக்குதவாச் சனியன்' பண்புச் சான்றிதழ்!

5

வேகம், வேதனைகளின் குமைச்சல் உள்ளே. சற்று நொடிகள் நகர்வில் உந்துகை. எழுதவேணும்... இதை வைச்சே .. ஆங்... எந்த வடிவம் நல்லாயிருக்கும். சிறுகதையா? கவிதையா. ...ஆங்... முதல் ஆயத்தப்படுத்துவம். தீர்மானமும் வந்திடும்.

வெள்ளைத்தாள்கள் தயார். மேசையின் முன்னே குந்தியாயிற்று.

எட, என்னெண்டு கேள்விப்பட்டது? வேலை செய்யப் போறதையும் என்னெண்டுதான் மோந்து பிடிக்குதோ!

மூடிவிழிக்கும் நொடிப்பொழுது. மேசையில் "மியாவ்"

போச்சு...... நாளெல்லாம் போச்சு. சனிக்காத்து இந்த நேரம் பாத்தே வீசவேணும்.

இஞ்சைபார் இதை! பிசின் குப்பியைத் தட்டிப்போட்டுது.

ஒழுகி ஓடிவந்த பிசின் கைகளை... தன்வசமின்றிப் பட்டென்று விலகின. மேசையில் ஒரேயொரு தாள். ஒரு ஓரம் பிசினுடன் காதல்; அந்தரத்தில் மறு ஓரம்; 'பறக்கவா விடவா' படபடப்பு. உருட்டி உருட்டிப் பார்த்தது. பாய்ந்தது. சில நொடிக்குள் சில்லறைச் சிதறலாய்...

நெருப்பாய்ப் பற்றியது. தன்வசமின்றியே சுழன்றது இடதுகை. பட்டது புறங்கை தான்: பொத்தென்று விழுந்தது. நானமாய், ஓலமாய் வழமைக்கு மாறான... ஆ...... பாவத்தை ஏன்தான் இப்படிச் செய்தன்? முழு மோடனப்பா. எண்டாலும் பொறுமையும் எத்தினைக் குத்தான். எழுதுகிறதென்ன சும்மாவே. தவம்! முனிவர் மாருக்கே வந்ததாம் ஆவேசம். இடையூறுகளெ மனிசரா இருந்தாலும் பத்தியெரியச் செய்தினமாம். வராதே மனிசனுக்கு?

இன்னமும் நின்றது. விறைப்பான பார்வை. விநோதமும் ஆவேசமுமாய் 'ஊர்...ர்ர்...'

எட, பாரன் சேட்டையை. எவ்வளவு' இடையூறுஞ் செய்யவிட்டிட வேணும். இல்லாட்டில் கோவம். தடிப்புத்தானே? இதென்ன மனிசர் மாதிரி. அதென்னெண்டு மிருகம்? இதுக்கு அஞ்சறிவு. அப்ப அஞ்சுக்குள்ள குணந்தானே? அப்பேன் மனிசர்?

...ஆங்... அது சரி, அஞ்சுக்கு உள்ளது தான். அஞ்சில ஆறடங்காது. ஆறிற அஞ்சடங்கும். ஆறில ஒண்டை விட்டா அஞ்சா!

# தீ வாத்தியார்

— வரதர்.

அப்பாவின் கடையிலே இன்னும் பல பல பொருள்கள் இருந்தன. எங்களூர் மக்களுக்கு எது எது தேவையாக இருந்ததோ அவையெல்லாம் அநேகமாக அந்தக் கடையில் இருந்தன.

ஒரு பெரிய சாடியில் சர்க்கரை. ஒரு தகர டப்பாவில் கற்கண்டு. இப்போது கற்கண்டு என்பது ஏதோ சினியைக் கட்டியாக்கி வைத்தது போலிருக்கிறது. அன்றைய கற்கண்டை எனக்கு இப்போதும் நன்றாக நினைவு இருக்கிறது. அவற்றில் சில பக்கங்கள் கண்ணாடி போல அழுத்தமாக இருக்கும். இடையிடையே சில கற்கண்டுகள் நூலினால் கோக்கப்பட்டிருக்கும். கற்கண்டு டின்னைத் திறந்து நான் அடிக்கடி ஒரு கட்டியை எடுத்து வாயில் போட்டுக் கொள்வேன். சில சமயங்களில் அப்பா 'வயிற்றில் பூச்சி வைக்கும்' என்று பேசி எடுக்க வேண்டாமென்று தடுப்பதுமுண்டு. என்றாலும் தினசரி ஏழெட்டுக் கற்கண்டுக் கட்டிகளையாவது நான் எடுத்து வாயில் போட்டுக் கொள்வேன். இனிப்பு அதிகம் சாப்பிட்டால் வயிற்றில் பூச்சி உண்டாகும் என்பது உண்மையாகத்தானிருக்கும். ஏனென்றால் அடிக்கடி சுமார் 3 — 4 மாதங்களுக்கொருமுறை எனக்குப் பேதி மருந்து வாங்கிக் கொடுப்பார்கள். பரியாரி இராசாதான் எங்களுடைய குடும்ப வைத்தியரும் நண்பருமாக இருந்தபோதிலும், பரியாரி பெத்தாரிடம்தான் எனக்குப் பேதி மருந்து வாங்கித் தருவார்கள். பணம் கொடுக்காமல் மருந்து வாங்கினால் அது சித்திக்காது என்று சொல்லி, இருபத்தைந்து சதம் தந்து விடுவார்கள். நான் அதைக் கொண்டு போய் பெத்தார் பரியாரியிடம் கொடுத்து, 'பச்சைத் தண்ணீர்ப் பேதி' வாங்கி வருவேன். வழக்கமாகப் பேதி மருந்தை விழுங்கிவிட்டு, தேநீர் குடிக்க வயிற்றால் போகும். பச்சைத் தண்ணீர்ப் பேதி மருந்தை விழுங்கிவிட்டு அவ்வப்போது பச்சைத் தண்ணீரைக் குடிக்க வயிற்றால் போகும். ஒருமுறை அளவுக்கதிகமாக வயிற்றால் போய், நான் களைத்து விழுந்ததும், பிறகு வயிற்றால் போவதை நிறுத்துவதற்கு மருந்து வாங்கித் தந்து நிறுத்தியதும் நினைவிருக்கிறது. இப்போதெல்லாம் கண்டபடி பேதி மருந்து எடுக்கக் கூடாதென்று

வைத்தியர்கள் சொல்கிறார்கள். — அது அந்தக் காலம்! காலத்துக்குக் காலம் வைத்திய முறைகளும் மாறிக் கொண்டுதானே இருக்கின்றன.

கற்கண்டை விட 'பல்லி முட்டை' என்ற இனிப்பும் ஒரு போத்தலில் இருந்தது. அதை இனிப்பு என்று சொல்வதில்லை. 'ஒரு சதத்துக்குப் பல்லிமுட்டை தாருங்கோ' என்றுதான் கேட்பார்கள். சிறு சிறு உருண்டைகளாக வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை என்று பல நிறங்களிலும் அந்த இனிப்பு உருண்டையாய் இருக்கும். வெள்ளை நிறத்திலிருக்கும் இனிப்பு சரியாகப் பல்லியின் முட்டையைப் போலவே இருக்கும். அதனால் அதற்கு 'இனிப்பு' என்ற பெயர் மறைந்து 'பல்லிமுட்டை' என்ற பெயரே வழங்கிற்று.

சிறு சிறு துண்டுகளான 'சொக்கிளேற்'றுகளும் அப்போதே வந்திருந்தன. அழகான வட்ட, சதுர டின்களில் அவை வரும். ஒவ்வொரு துண்டும் முதலில் சிறு ஓயில் பேப்பரால் சுற்றப்பட்டு அதன் மீது பல வர்ணங்களில் அழகான டிசைன்கள் போட்ட ஈயவத்திகளினால் சுற்றப்பட்டிருக்கும். 'சொக்கிளேற்'றைச் சாப்பிட்டுவிட்டு நான் அந்த ஈய வத்திகளை எறிந்துவிடமாட்டேன். அவற்றை நெளிவு நிமிர்த்தி அடுக்கிச் சேர்த்து வைத்திருந்தேன். எவ்வளவு அழகான வத்திகள் அவை!

மூன்று தகர டப்பாக்களில் 'பிஸ்கட்டு'களும் இருந்தன. அந்த டப்பாக்களின் முன்பக்கத் தகரம் வெட்டப்பட்டு கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. 'பிஸ்கட்' என்றதும், நைஸ், மாறி, கிறீம்கிறாக்கர்ஸ் என்ற வகைகளை [illegible]

ஒரு டின்னில் றஸ்க், இன்னொன்றில் மடத்தல், மற்றதில் பொழிஞ்சி, இந்தப் பொழிஞ்சி பிஸ்கட் இப்போது அருகி விட்டது. சிறு சிறு துண்டுகளாக, சீனிக் கரைசலில் அவைகள் தோய்க்கப்பட்டிருக்கும். தின்பதற்கு 'மொரு மொரு' என்றிருப்பதோடு இனிப்பாகவும் இருக்கும்.

'பொழிஞ்சி' என்றதும் என்னைப் படிப்பித்த ஒரு நல்ல ஆசிரியரின் நினைவு வருகிறது. அவருக்கு 'பொழிஞ்சியர்' என்று பட்டம். பொதுவாக நாங்கள் அவருடைய பெயரைச் சொல்வது கிடையாது. 'பொழிஞ்சியர்' என்றுதான் கதைப்போம். அவர் முதன் முதலாகப் பாடசாலைக்கு வந்ததும், அவர் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர் என்று அறிந்தோம். ஒரு மாணவன் ''டேய், இவர் துறைமுகத் தடியால்தான் வந்திருப்பார். அங்கே பொழிஞ்சி கிடைக்கும். பொழிஞ்சி வாங்கித் தின்று கொண்டு வந்திருப்பார்'' என்று தனது கற்பனையை எடுத்துவிட்டான். எப்படியோ அன்றுமுதல் அவர் 'பொழிஞ்சியர்' ஆகிவிட்டார்!

அந்தக் காலத்திலேயே ஆசிரியர்களுக்குப் பட்டம் சூட்டுவதில் மாணவர்கள் வல்லுநர்களாக இருந்தார்கள். வாக்கர், அலட்டை, பிரசங்கி, மீசையர், ஆமர் — என்று இப்படிப் பல பட்டங்கள் கொண்ட ஆசிரியர்களிடம் நான் படித்திருக்கின்றேன். 'தீவாத்தியார்' என்பவரும் இவர்களில் ஒருவர்தான்!

பிஸ்கட் டின்களுக்குப் பக்கத்தில் அகலமான வாயுள்ள ஒரு போத்தலில் நூல்பந்துகள் இருந்தன. இவை தையல் தைப்பதற்கான நூல் பந்துகள். தையல் ஊசிக்கும் ஒரு சிறு பெட்டி

மேசையின் மீது இருந்தது. அப்போது கிராமத்தில் தையல் நூலும் ஊசியும் அவசியமான தேவைகள். தையல் மெஷின்களோ, தையற்காரர்களோ அங்கே இருந்ததில்லை. கிழிந்து போன வேட்டி, சால்வை, சேலைகளைத் தூக்கி மூலையில் போட்டுவிட மாட்டார்கள். கிழிசல்களைத் தைத்துத் தைத்து உபயோகிப்பார்கள். அநேகமாக பல பெண்களுக்குத் தைக்கத் தெரியும். தைப்பதென்றால் கிழிந்த துணிகளைத் தைப்பது. பெண்கள் தங்களுக்குத் தேவையான 'றவிக்கை' யையும் தாங்களே தைத்துக் கொள்வார்கள். 'ஃபாஷன்' சமாச்சாரமெல்லாம் கிடையாது. கையையும் கழுத்தையும் வெட்டிப் பொருத்தி ஒரு சட்டை வதத்தால் சரி. ஆண்கள் பொதுவாகச் சட்டை போடும் பழக்கம் இல்லை. அதனால் தையல் பிரச்சனையும் இல்லை.

அந்தக் காலத்தில் பெண் பிள்ளைகளுக்குத் "தையல் பாடம்" என்று ஒரு பாடம் முக்கியமாக இருந்தது. முக்கியமாக ஊசியில் நூல் கோக்கவும், இரண்டு விரல்களை மடித்து அதனூடே தைக்க வேண்டிய துணியை விறைப்பாகப் பிடித்துக் கொள்ளவும், நூலோடவும் 'விசுப்பம்' தைக்கவும். அதற்கு மேல் போனால் தெறிஓட்டை தைக்கவும் பெண்கள் பாடசாலையில் பயின்று கொள்வார்கள்.

இப்போது பாடசாலைகளில் பெண் ஆசிரியைகளே பெரும்பான்மையாகி விட்டார்கள் போலிருக்கிறது. அந்தக் காலத்தில் ஒரு பாடசாலைக்கு ஒரே ஒரு பெண் ஆசிரியைதான் இருப்பார். அவரை 'ஆசிரியை' என்றோ "ரீச்சர்" என்றோ சொல்வதில்லை. 'தையலம்மா' என்றுதான் சொல்வார்கள். அவருக்கு முக்கியமான வேலை பெண் பிள்ளைகளுக்கு தையல் பாடம் படிப்பிப்பதுதான். நேரமிருந்தால், அரிவரி, முதலாம் வகுப்புகளுக்கு பாட்டு, வாசிப்பு, கணிதம் முதலிய சில பாடங்களையும் படிப்பிப்பார்.

1940 ஆம் ஆண்டில் மூளாய் சைவப்பிரகாசா வித்தியாசாலையில் நான் எஸ். எஸ். ஸி வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது கூட, அந்தப் பெரிய பாடசாலையில் ஒரே ஒரு பெண் ஆசிரியைதான் இருந்தார். அவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியை. அவரையும் தையலம்மா என்றுதான் சொன்னோம். ஆனால், அவர் தையல்பாடம் படிப்பித்தாரா என்பது தெரியவில்லை. பாலர் வகுப்புத்தான் அவருக்குரிய வகுப்பாக இருந்தது!

கடையில் தையல் ஊசிச் சரை இருந்த சிறிய மேசையில் சிகரட், பீடியுடன், ஒருபக்கத்தில் ஒரு கர்ப்பூரப் பெட்டியும் இருக்கும். அந்தச் சுற்று வட்டாரத்தில் புகழ் பெற்ற கிருஷ்ணன் கோயில் சமீபத்தில் இருந்ததால் கர்ப்பூர வியாபாரம் ஒழுங்காய் நடந்தது. கர்ப்பூரம் இப்போது போல வெறும் கடதாசிப் பக்கட்டுகளில்வரவில்லை. அதுவும் வெளி நாட்டிலிருந்தே வந்தது. கைக்கு அடக்கமான— சுமார் ஒரு சாண் நீளம், அரை அடி அகலமான தகரப் பெட்டிக்குள் சிறு சிறு பக்கட்டுகளாக அது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். கர்ப்பூரம் முடிந்தால் அந்தத் தகரப் பெட்டி பல தேவைகளுக்கு உதவிற்று. முக்கியமாக பெண் பிள்ளைகளின் தையல் பெட்டியாக அந்தக் கர்ப்பூரம் வந்த பெட்டிதான் வழங்கிற்று

அந்தச் சிறிய மேசை மீது இன்னொரு முக்கியமான பொருள் பொருள் இருந்தது. அதுவே கடையின் கணக்குக் கொப்பி. அந்தக் கொப்பியில் கொள்முதல் கணக்கோ, விற்று வரவுக் கணக்கோ - அப்படியான ஒன்றும் இருக்காது. கடன் வாங்குபவர்களின் பெயர்களும், இன்ன திகதியில் இன்ன பொருள் இன்ன விலைக்குக் கடனாக வாங்கினார் என்ற விபரமும் இருக்கும். உண்மையில் அது கடைக்கணக்குக் கொப்பியல்ல. கடன் கணக்குக் கொப்பி தான்.

கடனுக்குப் பொருள் கொடுக்கும்போது சிட்டை எழுதுவதோ கடன் வாங்குபவரிடம் கையெழுத்து வாங்குவதோ கிடையாது.

அநேகமாகக் கடன் வாங்குபவர்கள் ஒழுங்காக அவ்வப போது பணத்தைக் கொடுத்து விடுவார்கள் யாரும் கணக்குத் தவறு என்றோ, தான் வாங்கவில்லையென்றோ சொன்னதை நான் அறியேன். ஒழுங்காகத் திருப்பிக் கடன் பணத்தைக் கட்டக் கூடியவர்களுக்குத்தான் கடன் கொடுக்கப்படும்.

எப்போதாவது ஒருவர் கடனைக் கட்டாமல் நெடுநாட்களுக்கு இழுத்தடித்தாரானால், அப்பா கணக்குப் புத்தகத்தை கிராமக் கோட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் கடனாளியைச் "சித்தாரிப்பார்" (வழக்குப் பதிவு செய்வார்). இந்த வழக்குக்கு சட்டத்தரணிகளோ வேறு எந்தச் செலவுகளோ கிடையாது. கிராமக்கோட்டு நீதவான் விதானையார் மூலம் எதிரிக்குக் கட்டளை அனுப்பிக் கூப்பிட்டு, குறிப்பிட்ட ஒரு தவணைக்குள் பணத்தைக் கட்டிவிடும்படி கட்டளையிடுவார். அநேகமாக அந்த அளவில் பிரச்சினை முடிந்து விடும்.

இந்தக் 'கிராமக் கோடு' என்பது பின்னால் இல்லாமல் போயிற்று. சிறு சிறு வழக்குகளுக்கெல்லாம் பொலிஸ் கோட்டுக்குப் போகவும், அங்கே சட்டத்தரணிகளுக்குப் பணம் கொடுத்துக் கெட்டழியவும் வேண்டிய நிலை ஏற்பட்டது!

கடையின் உட்பக்கச் சுவர் ஓரமாக ஒரு தடித்த நீளப் பலகை, அரை அடி உயரத்தில் கால் வைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பலகையின் மீது ஒரு பெரிய கடகத்தில் ஊர் அரிசி இருக்கும். அப்பாவே நெல் மூடை வாங்கி வந்து, அவித்துக் காயவைத்து, மாட்டுவண்டியில் சங்கானைக்குக் கொண்டுபோய் அங்கேயிருந்த 'மில்' லில் குற்றிக் கொண்டு வந்த அரிசி. மில்லிலிருந்து அரிசியை ஒரு சாக்கிலும், தவிட்டை இன்னொரு சாக்கிலும் கட்டிக் கொண்டு வருவார். தவிட்டை, தலைவாசல் மூலையிலிருந்த ஒரு வெற்றுச் சீமெந்துப் பீப்பாவில் கொட்டி வைப்பார். மாடுகளுக்கு அவ்வப் தவிடு கொடுப்பது வழக்கம்.

இப்போதுள்ள பலருக்கு சீமெந்துப் பீப்பாவைத் தெரியாது. இப்போதெல்லாம் தடித்த கடதாசிப் 'பாக்' கில்தானே சீமெந்து வருகிறது. அந்தக் காலத்தில் சீமெந்தும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள். பெரிய பீப்பாக்களில்தான் வரும். சீமெந்தை உபயோகித்த பிறகு அந்தப் பீப்பா வேறு பல தேவைகளுக்குப் பயன்படும்.

சீமெந்துப் பீப்பா என்றதும் ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. எங்கள் வீட்டுக்கு முன்னாலுள்ள ஒடு வீட்டில் சிறு பிள்

ளைகள் ஒளித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒளித்து விளையாடுவதும் இப்போது அருகிக் கொண்டு வருகிறது. ஏழெட்டுப் பிள்ளைகள் ஒன்று கூடுவார்கள். ஒரு பிள்ளையின் கண்களை இன்னொருவர் பொத்திக் கொண்டிருக்க, மற்றப் பிள்ளைகளெல்லாம் ஓடிப்போய் ஒவ்வொரு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்வார்கள். பிள்ளையின் கண்களைப் பொத்திக் கொண்டிருப்பவர் "கண்ணாரே கடையாரே, காக்கணமாம் பூச்சியாரே! எனக்கொரு முட்டை உனக்கொரு முட்டை பிடித்துக் கொண்டோடி வா!" என்று ஒரு பாட்டுப்பாடி கண்களை மூடிய கைகளை எடுத்துப் பிள்ளையைப் போகவிடுவார். அந்தப் பிள்ளை ஓடி ஓடி மற்றவர்கள் மறைந்திருக்கும் இடங்களைத் தேடி அவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். முதலில் கண்டு பிடிக்கப்படுபவரே அடுத்த முறை கண்கள் பொத்தப்படுவார்.

முன் வீட்டில் இப்படி ஒளித்து விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு முறை ஒரு சிறு பிள்ளையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் கண்டு பிடிக்க வேண்டியவர் மாத்திரமன்றி, எல்லாப் பிள்ளைகளுமே சேர்ந்து தேடத் தொடங்கினர். கனை பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். பலனேயில்லை. கடைசியில் வீட்டுப் பெரியவர்களுக்கு மட்டுமின்றி, அயலட்டைக்கும் இது தெரிய வரவே, எல்லாருமாகச் சேர்ந்து அந்தப் பிள்ளையைத் தேடினார்கள். கிணற்றையும் எட்டிப் பார்த்தார்கள்.

கடைசியாக அவர்களுடைய வீட்டுத் தலைவாசலில் கிடந்த சிமெந்துப் பிப்பாவுக்குள் அந்தப் பிள்ளை இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது!

ஒளிப்பதற்கு நல்ல இடமென்று கருதி சிமெந்துப் பீப்பாவுக்குள் இறங்கிப் பதுங்கிய அந்தப் பிள்ளை சற்று நேரத்தில் அப்படியே நித்திரையாகி விட்டது!

பெரிய கவலையுடன் பதறிப் போய் தேடிக் கொண்டிருந்த எல்லாரும் 'ஓ, ஓ' என்று சிரித்தது இன்னும் நினைவிருக்கிறது.

அப்பாவின் ஊர் அரிசிக் கடகத்துக்குப் பக்கத்தில், ஒரு பெரிய சாக்கில் வெள்ளைப் பச்சை அரிசி இருக்கும். ரங்கூன் பச்சை அரிசி என்று பெயர். பர்மாவிலிருந்து இறக்குமதியாவது. அப்பம், தோசை முதலிய பலகாரம் செய்பவர்கள் அந்த அரிசியைத்தான் வாங்குவார்கள்.

பச்சை அரிசி மூடைக்குப் பக்கத்தில் ஐந்தாறு பெரிய உமல்களில் சில பொருள்கள் இருந்தன. ஒரு உமலில் செத்தல் மிளகாய் இருந்தது. மற்றவைகளில் உழுந்து, பயறு முதலிய பொருள்கள் இருந்தன.

இப்போது எந்தப் பொருள் வாங்குவதானாலும் 'பாய்க்' தேவைப்படுகிறது. முன்பு இந்த 'பாய்க்' குகளின் இடத்தை உமல்களும், பெட்டிகளுமே பெற்றிருந்தன. இந்த உமல்கள் எத்தனை வகை! சிறிய— ஒரு அடி அகலம், ஒரு அடி நீளமான உமல்களிலிருந்து பெரிய— 2 அடி அகலம், 3 அடி உயரமான உமல்களும் இருந்தன. பெட்டிகளும் இப்படியே. சிறிய குஞ்சிப் பெட்டியிலிருந்து சுமார் ஒரு முழக் குறுக்களவுள்ள பெட்டிகள் இருந்தன. எல்லாம் பனை ஓலையினால் செய்யப்பட்டவை. உள்ளூர் மூலப் பொருட்களைக்

கொண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை. இந்த 'பாக்' குகளுக்காக மட்டும் ஒரு ஆண்டில் எங்களுடைய பணம் எவ்வளவு தொகையாக வெளியே போய்க் கொண்டிருக்கிறது என்பதை யாராவது அறிந்து சொன்னால் திகைப்பாக இருக்கக் கூடும்.

இப்போது கச்சான் கடலை வாங்குவதற்குக் கூட 'பாக்' தேவையாக இருக்கிறது. முன்பு இப்படியான பல பொருட்களை 'மடி' யில்தான் வாங்கிக் கட்டிக் கொள்வார்கள். 'மடி' என்றால் தெரியுந்தானே? குழந்தையை மடியில் வைத்திருந்தாள் என்று சொல்கிறோம். இது அந்த மடியல்ல. உடுத்தியிருக்கும் வேட்டியில் வயிற்றுப் பக்கமாகச் சற்றே வெளியே இழுத்தெடுத்து ஒரு சிறு 'பை' போல ஆக்கிக் கொள்வதுதான் மடி. ''மடியில் கனமிருந்தால் வழியில் பயம்'' என்ற ஒரு பழமொழியும் உண்டு.

சில சமயங்களில் 'மடி' க்குப் பதிலாக 'சண்டிக்கட்டை' யும் பயன் படுத்திக்கொள்வதுமுண்டு. இதென்ன 'சண்டிக்கட்டு' என்கிறீர்களா? உடுத்தியிருக்கும் வேட்டியை மடித்துக் கட்டிக் கொள்வதுதான் 'சண்டிக்கட்டு' இந்தச் சண்டிக்கட்டு மடிப் பின் பகுதியை ஒரு 'பை' போலப் பாவித்து அதற்குள் பொருள்களைப் போட்டுக் கொண்டு நடக்கும் வழக்கமும் இருந்தது.

கடையின் பின் சுவர் ஓரமாக ஒரு மூலையில் பெரியதொரு பானை இருந்தது. கன்னங் கரேலென்று இருக்கும். அதற்குள் நல்லெண்ணை இருந்தது. நல்லெண்ணை அன்று மிக முக்கியமான ஒரு பொருளென்பதை முன்பே சொல்லியிருக்கிறேன்.

கடைக்குப் பக்கத்தில் ஒரு அ. மி. பாடசாலை இருந்ததால் அதன் தேவை நோக்கி, சிலேற், பென்சில், கொப்பி, பேனை, மைக்கூடு, மைக்கட்டி, (இந்தக் கட்டியை நீரிலே கரைத்து மைக் கூட்டுக்குள் விட்டு வைத்துக் கொள்ளலாம்) முதலியனவும், புத்தகங்களான 'மிஷன் தமிழ்ப் புத்தக' மும் 'இயற்கை விளக்க வாசகம்' என்ற புத்தகமும் விற்பனைக்காக இருந்தன.

இவை எல்லாவற்றுக்கும் புறம்பாக இன்னொருவகைப் பொருள்களும் அந்தக் கடையில் இருந்தன.


எங்களூரில் புகழ் வாய்ந்த இரண்டு வைத்தியர்கள் இருந்தார்களென்று குறிப்பிட்டிருந்தேனல்லவா? அநேகமாக அவர்கள் நோயாளிகளுக்கு 'குடிநீர் மருந்து' எழுதிக் கொடுப்பார்கள். அதனால் அந்த மருந்துப் பொருள்களும் பற்பல விதமான டின்னிகளில் இருந்தன. திற்பலி. வேர்க்கொம்பு, பரங்கிக்கிழங்கு, தேத்தாங்கொட்டை — இப்படிச் சில மருந்துப் பொருள்களின் பெயர்கள் இன்னமும் என் நினைவில் இருக்கின்றன. ஒரு சிறிய வாய் குறுகிய சாடியில் 'பாதரசம்' என்ற பொருளும் மருந்துத் தேவைக்காக இருந்தது. அதிக விலையுள்ளது. செத்தல் மிளகாய் ஒன்றை எடுத்து, அதன் காம்பைக் கிள்ளி விதைகளைக் கொட்டிவிட்டு, அந்த மிளகாய்க் கோதுக்குள்தான் இந்தப் பாதசரம் என்ற பொருள் மிகக் கவனமாக விட்டுக் கொடுக்கப்படும். 'கவனம்' என்று நான் சொல்வதில் மிகுந்த பொருள் உண்டு. பாதரசம் என்பது குழு குழு என்று திரவமுமில்லாமல் திடமுமில்லாமல் இருக்கும். ஈயம் போலக் கனக்

கும். ஒரு துளி கீழே விழுந்தால் சிறு சிறு கடுகுகள் போலப் பிரிந்து சிதறும். அந்தத் துகள்களை மெதுவாகக் கூட்டி ஒன்று சேர்த்தால் பழையபடி ஒன்றாகச் சேர்ந்துவிடும். உள்ளங்கையில் விட்டால் ஒட்டாது. தாமரையிலையில் தண்ணீர் போல ஓடிக் கொண்டிருக்கும். அதில் ஒரு சிறு துளி எடுத்து வெற்றிலை சாறோடு சேர்த்து கசக்கி, அதை ஒரு சதக் காசின் மீது தேய்த்தால், செம்பினாலான அந்த ஒரு சதம் வெள்ளிக் காசான 50 சதம் போல நிறம் மாறிவிடும். இதை யாரோ எனக்குச் சொல்லி நான் செய்து பார்த்திருக்கிறேன். (அந்தக் காலத்தில் ஒரு சதமும், 50 சதமும் ஒரே அளவானவை) ...க் தப் போலி 50 சதம் பல ம... நேரங்களுக்கு நிறம் மாறாம... ருக்கும்.

அப்பாவின் கதையை வைத்துக் கொண்டு இன்னும் நிறைய விடயங்கள் எழுதுவதற்கு இருக்கக்கூடும். இப்போதைக்கு நினைவில் வந்தவை இவ்வளவுதான். கதையை இவ்வளவுடன் நிறுத்திவிட்டு வேறு ஏதாவது சொல்லலாமா பார்க்கிறேன்.

(தொடரும்)


கலைக்கண்!



மழலைச் செல்வங்களின்

உயிரோவியமான படங்களுக்கு

பேபி போட்டோ படப்பிடிப்பாளர்கள்

பலாலி றோட், வளாகச் சந்தி, திருநெல்வேலி.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய

# தியாகப் பிரம்மோற்சவம்

த. சிவகுமாரன்



இவ் விழா 31 - 1 - 9? அன்று நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்றது. இவ்விழாவின் காலை நிகழ்வுகளுக்கு சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமை தாங்கினார்கள். கலைப்பேரறிஞர் பஞ்சாபிகேசன் அவர்கள் மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து தலைவரின் தலைமையுரை இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஈழத்தின் தலைசிறந்த இசையறிஞர்கள் பலர் சேர்ந்து பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடினர். அவர்களது இன்னிசையைத்தொடர்ந்து ஈழத்தின் சிறந்த நாதஸ்வர வித்துவான்களான பஞ்சாபிகேசன், நாகேந்திரம், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி உட்படப் பல நாதஸ்வர கலைஞர்களும், பி. கணேசன், நித்தியானந்தன் உட்படப் பல தவில் வித்துவான்களும் இணைந்து மங்கல இசை வழங்கினார்கள். எல்லோரையும் வசப்படுத்திய அவ்விசையைத் தொடர்ந்து விருது வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு விபுலானந்தர் இசைக் கல்லூரியின் அதிபராக இருந்த சங்கீத பூஷணம் கே. ஆர். நடராசா அவர்களுக்கு விருது வழங்கும் வைபவம் இடம் பெற்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா அவர்கள் விருது வழங்கும் உடையோடு வருகைதந்து இசையோடு ·0 வருடங்களுக்கு மேற்பட்ட தொடர்புடைய கே. ஆர். நடராசா அவர்களை வாழ்த்தி, அவர்களுக்கு "இசைப்பேரறிஞர்" பட்டம் வழங்கி தங்கப்பதக்கம் அணிவித்தனர்.

சிறப்பாக நடந்த விருது வழங்கும் வைபவத்தைத் தொடர்ந்து பக்தியோடு பூசைகள் இடம்பெற்றன. செவிக்கு இசை மூலம் உணவு ஊட்டியபின் வயிற்றுக்கு உணவு வழங்கப்பட்டது.

மாலை நிகழ்வுகள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் 3 மணியளவில் ஆரம்பமானது. முதலில் பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசை இடம்பெற்றது.

பேராசிரியரின் தலைமையுரையைத் தொடர்ந்து, திருமதி வாசஸ்பதி ரவீந்திரன் அவர்களின் சங்கீதக் கச்சேரி இடம்பெற்றது. கச்சேரியைத் தொடர்ந்து, இசைப்பேரறிஞர் விருதைப் பெற்ற திரு. நடராசா அவர்களின் கச்சேரி இடம் பெற்றது.

ஜனவரி மாத மல்லிகை கண்டேன். மகிழ்ச்சி. அதில் திரு. அனு. வை. நாகராசனின் 'தலித்' இலக்கியம் பற்றிய கட்டுரையை வாசித்த பொழுது அதற்கு ஓர் எதிர்வினை எழுத வேண்டும் போல் தோன்றியது.

# தலித் இலக்கியம் பற்றி...

த. குலசிங்கம்

தலித்; தலித் இலக்கியம் என்கின்ற ஒரு பூதம் பற்றி ''92 அக். சுபமங்களா'' யாழ்ப் பாணத்துக்கு வந்தபின் எல்லா இலக்கியவாதிகள் மத்தியிலும் பேசப்பட்டு, பூச்சாண்டி காட் டப்பட்டு வருகின்றது. இந்தப் புதிய பூதம் பற்றி ஒரு கட்டுரை 93 ஜனவரி மல்லிகையில் வந் துள்ளது. இக் கட்டுரை பற்றிய எதிர்வினைக்கு வருமுன், தலித் இலக்கியம் பற்றிச் சில வார்த்தை கள் எனக்குத் தெரிந்தமட்டில்.

'தலித்' என்ற சொல் குறிப் பது அடக்கப்பட்ட, ஒடுக்கப் பட்ட மக்களையே. இந்த மக் கள் பற்றி பேசுவதுதான் தலித் இலக்கியம். சமூக ஏற்றத் தாழ் வுக்குள் சிக்குண்டு சிதைந்து சிரழியும் மக்கள் இந்தச் சிரழி விலிருந்து விடுபட்டு எழத் துடிப் பதும், அதனால் ஏற்படும் போராட்ட வரலாறுகளை எழுத் தில் வடிக்கும் போது தலித் இலக்கியம் எழுகின்றது.

சாதி, இந்தியாவில், இலங் கையில் படிந்துவிட்ட கொடிய வலைப் பின்னல். பிறப்பால் இது உற்பத்தியாக்கப் படுகின் றது. காரணம் சாதி பற்றிய கருத்து மிக ஆழமாக மொழியில் இருக்கின்றது; சடங்கில் இருக் கின்றது; சாஸ்திரத்தில் இருக் கின்றது: அரசியலில் இருக்கின் றது; அதிகாரத்தில் இருக்கின் றது. இப்படியாக சகல துறை யிலும் பின்னப்பட்டு இறுக்கப் பட்ட வலையை அறுத்துக் கொண்டு வரத் துடிப்பவர்கள் தான் தம்மை தலித் எனவும் தம்மால் படைக்கப்படும் இலக் கியத்தைத் தலித் இலக்கியம் என்று கூறுவது மாத்திரமல்ல, தமக்கு ஒரு 'தலிஸ்தான்' வேண் டும் என்ற கோரிக்கையையும் வைத்துப் பேராடுகின்றார்கள்.

தமிழ் இலக்கியத்தில் இவ் வகை இலக்கியம் எந்த அளவின் வளர்ந்துள்ளது அல்லது இடம் பெற்று உள்ளது என்று பார்ப் போமாயின் நிறையவே வந்தி ருக்கின்றன. ஈழத்தில் ஒரு கால கட்டத்தில் இவ்வகை இலக்கியமே கூடுதலான இடத்தைப் பிடித் துக் கொண்டது என்பதை நாம் அறிவோம். தற்பொழுது தலித் என மராட்டியத்தில்

அழைக்கப் படுபவையும் இங்கு சாதியம் பற்றி வந்தவையும் உள்ளடக்கத்தால் ஒன்றேதான்.

எழுபதுகளின் கடைசியிலும் எண்பதுகளின் தொடக்கத்திலும் வந்த 'படிகள்', 'இலக்கிய வெளிவட்டம்' போன்ற சிறு சஞ்சிகைகள் 'தலித்' என்ற சொல்லினைப் பயன்படுத்தின. தலித் பற்றிய விவாதங்களை, ஆக்கங்களை ஆரோக்கியமான முறையில் வெளியிட்டன. அண்மைக் காலங்களில் குடந்தையில் இருந்து வெளிவரும் பொதிகை வெற்பனின் 'பறை' பாண்டியிலிருந்து வரும் 'நிறப்பிரிகை' போன்ற சிறு சஞ்சிகைகள் காத்திரமான பங்களிப்பைத் தலித் இலக்கியத்துக்குச் செய்து வருகின்றன. மதுரையிலிருந்து 'தலித்' என்ற பெயரில் ஓர் சிறு சஞ்சிகையும் வெளிவருகின்றது. தமிழவன், அ. மார்க்ஸ், ஞானி, பழமலய், ராஜ் கௌதமன், கல்யாணி போன்ற தமிழ் ஆய்வாளர்கள் மிகுந்த சிரத்தையுடன் செயல்படுகின்றனர்.

இந்தப் பின்னணியுடன் திரு. அனு. வை நாகராஜனின் கட்டுரையைப் பார்ப்போம். இக் கட்டுரையின் பெரும் பகுதி 'சுபமங்களா அக். 92' இதழில் வந்த கட்டுரைகள், பேட்டிகள் போன்றவற்றின் மறுவார்ப்புப் போன்றுள்ளது போல, எனக்குப் படுகின்றது.

ஒரு விடயம் பற்றி எழுத வரும் பொழுது அந்த விடயம் பற்றி நல்ல தெளிவு வேண்டும். பின்பே அதை எழுத்தில் வைக்க வேண்டும். இல்லையாயின் எழுதுபவனும் குழம்பி அதை வாசிப்பவனும் குழம்பிப் போவதுதான் கிடைக்கும் பலன். ஒரு பட்டியலை உருவாக்கும் பொழுது மிகுந்த பகுப்பாய்வுணர்வுடன் காலநிரை தவறாது தயாரிக்க வேண்டும். இவையாவும் மேற் குறிப்பிட்ட கட்டுரையில் சிறிதும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

ஈழத்தின் தலித் இலக்கியம் பற்றிக் கூற வந்த கட்டுரையாளர் அங்கும் பல தவறுகளை விட்டுள்ளார். இனிக் கட்டுரையில் சில குறிப்புக்களைப் பார்ப்போம்.

1. மேலாண்மைச்சமூகம்பற்றிக் கூற வந்தவர் "அந்நியர் ஆட்சியின் போது இம் மேலாண்மை பெருமளவு முதன்மை பெறாவிடினும்" என்கின்றார். இக்கூற்றினைப் பார்க்கும் போது அந்நியர் ஆட்சியில் சாதியத்தின் தாக்கம் குறைந்தது; சுதந்திரத்தின் பின்தான் அதன் தாக்கம் கூடியது என்ற ஒரு மயக்கத்தை தருகின்றது அல்லவா? சுதந்திரத்தின் பின் 1956 இல் இலங்கையின் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், அதன் விளைவாகத் தோன்றிய சுயமொழிக் கல்வி. இவை யாவும் சமூகக் கட்டுமானங்களை நிலைகுலைய வைத்தன என்பதும், சாதியப் போராட்டங்கள் ஏற்பட்டு மாறுதலுக்குட்பட்டவை என்பதும்தான் உண்மை அல்லவா?

2. தேசவழமை சட்டங்களுக்குள்ளும் சமயச் சடங்குகளுக்குள்ளும் நின்று கிராம மட்டங்களில் அது தலையெடுத்தது என்கிறார்.

முதலில் அந்நியர் ஆட்சியில் சாதியம் வலிமை பெறவில்லை என்றவர் உடனேயே 'தேசவழமைச் சட்டங்களுக்குள் நின்று' என்கிறார். இந்தத் தேச

## தேசியச் சின்னம்

நாட்டின்
தேசியச் சின்னம்
அடையாள அட்டை.

●

அது தொலைந்தால்
நாடே
தொலைந்ததாக
அர்த்தமல்லவா?

●

அதுதான்
அது
அடிக்கடி
சோதனைக் குள்ளாக்கப்
படுகிறதோ?

ச. மணிசேகரன்

---

வழமைச் சட்டம் யாரால் யார் நலன் கருதி யாருடைய காலத்தில் உருவாக்கப்பட்டவை என்பதை இந்த நாட்டின் சமூக அரசியல் வரலாற்றில் அக்கறை கொண்டவர்கள் அறிவர். கிராம மட்டத்தில் அன்றி நகரத்தில் சாதியத்தின் பிடி தளர்ந்திருந்தது என்று கூறுகின்றாரா? அப்படியாயின் அறுபதுகளின் கடைசியில் யாழ்ப்பாண நகரங்களின் சலவைத் தொழிலகங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஏன் பூட்டப்பட்டன?

3. இந்தியாவில் சாதியத்தை முதன்மைப் படுத்தியது பார்ப்பனியம் என்பதை அறிந்து கூறும் கட்டுரையாளர் யாழ்ப்பாணத்தில் சாதியத்தை முதன்மைப்படுத்தியவர்கள் யார் என்பதைக் கூறாமல் மேலெழுந்தவாரியாக மேலாண்மைச் சமூகம் என்கின்றார். அதன் பெயரை வசதியாக மறந்துவிட்டாரா? மறைத்துவிட்டாரா?

4. 'தலித்' எழுத்தாளர் பற்றி ஒரு பட்டியல் தருகின்றார். பல பழைய எழுத்தாளர்கள் தொலைக்கப்பட்டுவிட்டார்கள். என். கே. ரகுநாதன், நீர்வை பொன்னையன், பெனடிக்ற் பாலன், செ. யோகநாதன் போன்றவர்களின் எழுத்துக்களை மறந்து ஒரு தமிழ் இலக்கிய வரலாறு எழுத முடியுமா ஈழத்திலே? முடியும் என்கிறாரே கட்டுரையாளர்.

5. இவர் தந்த பட்டியலில் கூடப் பெயர்கள் காலவரையின்றி எகிறிக் குதிக்கின்றனவே ஏன்? கவிஞர் பசுபதி, அ. ந. கந்தசாமி, செ. கணேசலிங்கன், அகஸ்தியர், தெணியான் இவர்களுக்கு முற்பட்டவரா ராஜ ஸ்ரீகாந்தன்... புரியவில்லை.

6. டானியலால் படைக்கப்பட்டதுதான் 'பஞ்சமர்' தலித்துக்களுக்காகப் படைக்கப்பட்ட தலித் இலக்கியம் என்கின்றார் டொமினிக் ஜீவா. கவிஞர் பசுபதி, என். கே. ரகுநாதன், பெனடிக்ற் பாலன், தெணியான் போன்றவர்களின் படைப்புக்கள் யாரால் யாருக்காகப் படைக்கப்பட்டவை?

அனு. வை. நா. கட்டுரையைப் படித்துத்தான் ஓர் ஈழத்து இலக்கிய வாசகன் தலித் இலக்கியம் பற்றி அறிய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அந்த வாசகர்களை நினைத்து நான் பெருமூச்சுத்தான் விட முடியும். கட்டுரையை வாசிப்பவர்களுக்கு யானை பார்த்த மனோநிலை தான் வரும். ●

# இலங்கை இலக்கியப் பேரவை
## பரிசளிப்பு விழா

1989 / 90 ஆம் ஆண்டுகளுக்குரிய சிறந்த இலக்கிய ஆக்கங்களுக்கான பரிசளிப்பு விழா 14 - 02 - 1993 ஆம் திகதி நல்லூரில் கம்பன் கோட்டத்தில் நிகழ்ந்தது. பின்வரும் ஆக்கங்கள் குறித்த காலகட்டத்துச் சிறந்த படைப்புகளாகத் தெரிவாயின.

1. இலக்கிய ஆய்வு — கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ''ஈழத்து இசை நாடக வரலாறு''
2. நாவல் — 'நந்தி' ''நம்பிக்கைகள்''
3. சிறுகதை — சுதாராஜ் ''ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள்''
4. கவிதை — வவுனியா திலீபன் ''எனது ராகங்கள்''
5. நாடகம் — சொக்கன் ''மாருதப்பிரவல்லி''
6. சிறுவர் இலக்கியம் — கே. எஸ். ஆனந்தன் ''இராவணன் கோட்டை''
7. சமயம் — பா. சத்தியசீலன் 'அருளப்பர் அம்மானை'
8. அறிவியல் — டாக்டர் எம். கே. முருகானந்தன் ''தாயாகப்போகும் உங்களுக்கு''

பரிசளிப்புரையை எழுத்தாளர் திரு து. வைத்திலிங்கம் நிகழ்த்தினார்.

1960 — 1970 காலகட்டத்து இலக்கியத் தடத்தின் அடியொற்றிய எழுச்சியில் பரிணமித்தவர்களில் ஒருவன் என்ற வகையில் இலக்கியம் என்பது என்ன என்ற சிந்தனைத் தடம் என்னிடம் தெளிவுற வகுக்கப்பட்டுள்ளது என்ற நம்பிக்கையில் பின்வரும் ஆறு அம்சங்களை எனது உரையில் வலியுறுத்த விரும்புகின்றேன். அவை:

1. இலக்கிய ஆக்கம் என்று ஒன்று வெளிவரின் அது மக்களுக்காகப் படைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். மக்களது தாங்கொணாத் துயரங்களுக்கு ஒலிக்கீற்றாக ஒரு 'புள்ளி' அதில் சுட்டப்பட்டிருக்க வேண்டும்.

2. 'கோட்பாடு' ஒன்றோ பலவோ இலக்கியத்தில் இருக்கத்தான் வேண்டும்.

ஆனால் அந்தக் கோட்பாடுகள் நமது மூதாதையர்கள் வாழ்ந்து அனுபவித்து சமூகத்திற்குப் பய னுள்ள தகுதியுடையதெனக் கண்டதாக இருக்க வேண்டும். மனுக்குலத்தின் மேன்மைக்கு என்றும் காலதேச வர்த்தமானங் களைக் கடந்ததாக இருக்க வேண்டும். அவ்வகையில் ஈழமும் ஈழத்து எழுத்தாளரும் பெரு மைப்படலாம். எமது எழுத்துக் கள் பொழுதுபோக்கு ஒன்றைக் கருதி எழுதப்பட்டவையல்ல. ஈழத்தைப் பொறுத்தவரையில் இலக்கியக் கோட்பாடு இரண் டாக இருப்பதாக நான் கருது கின்றேன். ஒன்று மார்க்சீயத் சித்தாந்தம் தழுவியவை. மற் றது சமூகத்தின் தேவைக்கு உந்து கோலாக அமையும் சுய கோட்பாடுகள். அவ்வகையில் இன்றைய போராட்ட எழுத்துக் கள் முதன்மை பெறுகின்றன.

3. எழுத்துக்கு ஒரு சமூகப் பயன் — தேவை இருக்க வேண்டும். அது ஒரு தொழில். எமக்குத் தொழில் கவிதை என் றான் மகாபாரதி. ஆக்க இலக் கிய எழுத்தும் அதன் தொழிற் பாட்டைச் செய்ய வேண்டும். சமூகத்தின் வர்க்க முரண்பாட் டைக் களைந்தெறிய, சமூகத் தின் சாதித்தனையை அறுத் தெறிய, சமூகத்தின் சீதனக் கொடுமையை முற்றாக வேர றுக்க, சமூகத்தின் வறுமைப் பிணியை இல்லாதொழிக்க, எல் லாவற்றிற்கும் மேலாக ஓர் இனம் எழுச்சியுற எழுத்து உதவ வேண்டும். ஆம், இன்றைய எழுத்தின் சமூகப்பயன் நமது அடிமைத் தனையிலிருந்து விடு படுகின்ற முயற்சிக்காக எழுது வதுதான். இன்றைய போராட் டக் கால வேளையில் எமது எழுத்துக்கள் உந்து சக்தியாகச் சமூகப் பொருளாதார அரசியல் அனைத்து ரீதியிலும் வழிகாட் டும் எழுத்தாக அமைய வேண் டும். அதுதான் இன்றைய எழுத் தின் சமூகப் பயன் என்பேன்.

4. எமது ஆக்கவிலக்கியம்— கவிதை, காவியம், நாவல், சிறுகதை என்றெல்லாம் எழுது கின்றோம். இலக்கியம் என்று வரும்போது அதற்கு ஒரு கலை யழகு தேவை. அங்குதான் இலக் கியம் சாகாவரம் பெறுகின்றது. கம்பராமாயணம், சிலப்பதி காரம் என்ப கால ரீதியில் அழி யாதவை எனில் அவற்றின் கதையல்ல. அவற்றின் கதை கூறும் 'பாங்கு'. அதுதான் கலை யழகு!

5. அறிஞர் பலர் அடிக்கடி கூறுவது போல இலக்கியம் என்பது வாசிக்கப்பட வேண்டும். ஐந்து பேருக்காக எழுதிவைத்து விட்டு சுய இன்பம் கொள்வ தன்று. யாருக்கு எழுதினோமோ அவர்களைச் சென்றடைய வேண் டும். ஒரு தி. ஜானகிராமன், ஒரு கல்கி மக்களிடம் மேம்படு கின்றனர் என்றால் அவர்களது எழுத்துக்கள் மக்களால் வாசிக் கப்படுவதால்தான்.

6. இலக்கிய ஆக்கம் பேசும் களம் — பாத்திரம் என்பன யதார்த்தமாக மண்வாசனை யோடு இருக்க வேண்டும். தான் வாழ்ந்து, தான் சுவைத்து, தான் கண்டு அதனை எழுதி விடும் போதுதான் அங்கு ஆக் கம் பிறக்கும். சமூகம் எப்படி இருக்க வேண்டுமென்ற வலியு றுத்தல் இருக்க வேண்டும்.

இந்த ஆறு அடிப்படைகளில் எனது கருத்தை முன் வைக் கின்றேன்.

பண்டிதர்களுக்கும், புலவர் களுக்கும் மட்டுமே எழுத்துத்

தறை உரியது என்ற மாயை 1956 களில் உடைத்தெறியப் பட்டு. ஈழத்து இலக்கியவானில் ஒரு புதிய ஒளி தோன்றியது. இலக்கியத்துக்கு உயிர் ஊட்டும் சிந்தனையாளர்கள் புற்றீசல் போல் வெளிவரத் தொடங்கி னார்கள். இம் மறுமலர்ச்சியா னது 1960 களில் விசுவரூபம் எடுத்தது.

1960 களில் உருவான உரு வாக்கிய இலக்கியப் பரம்பரை யினர் ஈழத்தில் புதிய நம்பிக்கை வித்துக்களைத் தெளித்தனர். சமுதாயப் பார்வை, புதிய உல கத்தை உருவாக்க வேண்டு என்ற சிந்தனை ஓட்டம் உள்ளவர்க ளாகத் திகழ்ந்தனர். இவர்களது எழுத்துக்களில் சத்தியம் ஒலிக் கத் தொடங்கிய பொற்காலம் அது என்றால் மிகையாகாது. எண்ணற்றவர் எழுதிக் குவித்த னர். புதிய புதிய சஞ்சிகைகள் உதயமாகின. பல ஆக்கங்கள் நூல் உருவில் வெளிவந்தன. தமிழ் நாட்டு இலக்கிய வாச னையை முகர்ந்து அதனை அந்த முயற்சியின் சுகத்தை மற்றவர் களுக்கு எழுத்துமூலம் உணர்த்த முயன்றவர்கள், ஈழத்தில் தாமே தமக்கென்ற ஒரு பூங்காவை அமைத்து இலக்கிய வாசனை ஈழமெங்கும் கமழச் செய்தது பெரிய வரலாற்று மாற்றமாகும்.

தமிழை நன்றாகக் கற்றவர் கள் இலக்கியம் படைத்த காலம் போய் சாதாரணத் தொழிலாளியும் சிறுகதை புனைய முடியும் என்ற சூழ் நிலை உருவாகிய போது இலக் கியச் சிந்தனையாளர்கள் எமது ஆக்க இலக்கிய வளர்ச்சியின் பரிமாணத்தைக் கண்டு மூக்கில் விரலை வைத்து அதிசயப்பட்ட பொற்காலம் இது.

அறுபதில் சுயமாக ஆரம் பித்த பொற்காலமானது இரு பத்திஐந்து ஆண்டுகள் ராஜ நடை போட்டு, இந்த ராஜ பாட்டைக்கு, வாராந்திர சஞ்சி கைகள், மாதாந்த ஏடுகள், படைப்பாளிகள், வெளியீட்டார் கள், இலக்கிய விமர்சகர்கள், அதைவிட ரசனைமிக்க வாசகர் கள் பெரிய பெரிய விருட்சங்க ளாக நின்று நிழல் தந்தனர்.

எழுத்தாளர்கள் எழுதிக் குவித்தனர் என்றுதான் குறிப் பிட வேண்டும். அத்தனை துடிப்புப் வேகமும், பரவி நின் றதை யாராலும் மறுக்க முடி யாது. எழுத்தாளர்கள் தாம் படைத்த நவீனங்களில், தமது முற்போக்குச் சிந்தனைத் திறன், சமூகப் பிரக்ஞை போன்ற நல்ல அம்சங்களை உயிரோட்டமாக வைத்ததால் அவை வெற்றி பெற்ற ஈழத்து எழுத்தாளர் களை தமிழ் நாடும் இவர்கள் கணிசமானவர்கள் என்ற கருத்தை முன்வைக்க வழி வகுத் தனர்.

இப்படியான இலக்கியச் சோலைகளில் ஓங்கிவளர்ந்த விருட்சங்களாக நின்ற, நிற்கின்ற படைப்பிலக்கிய வாதிகள் தான் எத்தனை பேர்; மலைக்க வைக் கின்றன மனதை.

வசந்தம் வீசிய இந்த இலக் கியச் சோலைகள் இன்று கடும் புயலில் அகப்பட்டு, மௌன மாகத் தன் இலைகளை உதிர்த்து விட்டு இன்று இது வெறும் மரங் களோ என்று பார்ப்பவர் ஏக்க முற நிற்கின்ற மாயை ஏன்?

எமது சிந்தனைக்கு உரிய விஷயம் இது. எழுதிய கைகள் அப்படியே ஓய்ந்துபோய் உள் ளன வெளியீடுகள் அப்படியே நிற்கின்றன. இவை எல்லாம் புதிய வேகத்தில் ஓடிவந்த இலக் கியத் தேரை முண்டி போட்டு நிறுத்திவிட்ட அவலத்தை நாங் கள் உணர வேண்டும்.

இலக்கியத்தில் அரசியல் புகுந்த கதை வேறாகவும், அரசியலால் இலக்கியச் சிந்தனை ஓட்டம் நின்றதும் வெவ்வேறான விடயங்களாம். சுதந்திரமாக எழுத முடியாத மனத்தயக்கம். எழுதினால் என்னென்ன விபரீதங்களை எதிர்கொள்ள வேண்டுமோ என்ற பயம் எழுத்தாளர் மனங்களில் வியாபித்து நிற்கின்றது.

சமூகத்தின் புரை ஓடிய குறைபாடுகளை, அநீதிகளைத் தமது எழுத்துக்களால் தட்டிக் கேட்ட பேனாக்கள் இன்று செயலிழந்து நிற்கின்றன.

என்று தயக்கமின்றிக் கருத்துருத்துக்களை முன்வைக்கும் எழுத்து மறுபடியும் உதயமாகின்றதோ அன்றுதான் இலக்கியச் சோலையின் புதிய குருத்துகள் தோன்றும். புதிய வேகத்தில், துணிவுடன் நூல்களை வெளியிட்ட பிரசுர கர்த்தாக்கள். பத்திரிகைதாள் தட்டுப்பாட்டால் இன்று தமது நல்ல முயற்சிகளைக் கைவிட்டு விட்டனர்.

யுத்த சூழ்நிலையைக்காட்டி தேவையான பத்திரிகைத் தாள் இங்கு வர அனுமதியில்லை. ஆனாலும் சிலர் துணிந்து வேறு மார்க்கங்களில் நூல்களை வெளிவந்துள்ளனர். இவை வரவேற்கத்தக்கதுதான். நூல்கள் அழகுற அமையவில்லை என்று குறைபடுவோர் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனாலும் இப்பிரசுர கர்த்தாக்கள், ஆக்கவாதிகளின் முயற்சிகள் போற்றத்தக்கதாகும். ஆனால் இந்த ஓட்டத்திலும் ஒரு சிறு தேக்கம். இடர் சூழ்ந்த இக் காலகட்டத்தில் வெளிவரும் நூல்கள் பல ஆயிரம் ரூபாய்களை விழுங்கிவிடுவதால் நூலின் அதிகமான விலைக்கு சாதாரண வாசகனால் ஈடுகொடுக்க முடியாமல் உள்ளது.

இனி இவை எல்லாவற்றையும் விட இன்று எழுத்தாளர்களின் மன இயல்புகள், சிந்தனை ஓட்டங்கள், அவற்றைவிட மேலோங்கி நிற்கும் விமர்சகர்களது போக்கு. இவை எல்லாம் இன்று இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின்றனவா என்ற கேள்வி பெரிதாக நிற்கின்றது.

எழுத்தாளன் தன்னைத் தனது எழுத்தை மற்றவர்கள் போற்ற வேண்டும், மதிக்க வேண்டும் என்ற நியாயமான உணர்வை நாம் மதிக்க வேண்டும்.

இலக்கிய ஆக்கமும் அதன் சிந்தனையும் சுதந்திரமானவை. சுதந்திர லயம் தடம் புரளும் போது அங்கு ஆரோக்கியமான இலக்கியம் பிறக்க வழியில்லை. இச் சூழ்நிலை நிச்சயம் மாற வேண்டும். சக எழுத்தாளர்களோ அல்லது வாசகர்களோ இக்கருத்துத் திணிப்பை ஏற்கும் மனோபாவத்தில் உள்ளவர்களா என்று நாடி பிடித்துப் பார்க்க வேண்டிய காலகட்டம் இதுவாகும்.

நாம் நிறைய எழுதியாகிவிட்டது. இனி எழுத ஒன்றுமே இல்லை என்ற உணர்வு மாற வேண்டும். நான் எழுதினால் உலகம் ஏற்குமா என்ற பயம் இளம் எழுத்தாளரின் பேனா என்றுமே ஒய்ந்துபோகக் கூடாது. வெளிவரும் சஞ்சிகைகளும் தமது எண்ணங்களுக்கு ஏற்றால்போல கைக்கொள்ளும் இலக்கிய வடிகட்டலை எப்போது தவிர்த்துக் கொள்கிறார்களோ அன்றுதான் புதிய எழுத்தாளன் உருவாகுவான்.

இனி வளர்ந்து வியாபித்து நிற்கும் விமர்சக உலகம் தனியாகச் செயற்படுகின்ற அவல

நிலை இன்றைய இலக்கியத் தடங்கலுக்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. வளரும் இலக்கியப் பயிருக்கு உரமாக இருக்க வேண்டிய விமர்சனங்கள் முற்றாக அழித்துவிடும் அவல நிலையை தோற்றுவித்த காரணிகளை நாம் இனம் காணவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்.

யாரும் விமர்சனம் செய்யலாம் என்ற சுதந்திர நிலை இன்று உண்டு ஆனால் தங்கள் விமர்சனப் பார்வையின் கீழ்த் தான் எழுதுபவன் எழுத வேண்டும் என்ற எண்ணம் விமர்சகனது எண்ணத்திலிருந்து எப்ப உதிர்கிறதோ அன்றுதான் விமோசனம் பிறக்கும் நாளாகும்.

இலக்கியக் கூடல் அதிகமாகி உள்ள நாட்கள் இவை.

உலக இலக்கியத் தரத்திற்கு நாம் உயர வேண்டும் என்று இன்று ஆசைப்படுகின்றோம். ஆனால் அந்த ஆசையை வளர்த்துவிடவோ ஊக்கமளித்து தைரிய மூட்டவோ இன்று எந்த ஒரு விமர்சகரோ அல்லது இலக்கிய வாதிகளோ அல்லது இலக்கிய ஒன்றிணைந்த அமைப்புகளோ முன் வந்துள்ளனவா?

எழுத்தாளர் ஒன்றியம் இலக்கிய வட்டம் என்று செயற்பட்டால் புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் எழுத்துப் பட்டறை போன்ற பயிற்சி வசதிகளே ஆரம்பித்துச் செயல்பட வேண்டிய காலகட்டம் இது. பரீட்சை வைத்து புள்ளி வழங்குவது போல, வெறும் பரிசை வழங்கியது போதும் என்று வாழா இருக்க வேண்டிய காலமல்ல இன்றைய நிலை.

எழுத்தாளர்கள் பயமின்றி உண்மையை எழுத வேண்டும். சில சமயங்களில் அரசியல் சூழ்நிலைகள் சாதகமானதாக அமையாமல் இருக்கலாம். இந்த மந்த நிலை இருக்கும்மட்டும் நல்ல இலக்கியம் தோன்ற வாய்ப்பில்லை.

எழுத்தாளர் ஒன்றியமோ, அல்லது இலக்கிய வட்ட அமைப்புகளோ எழுதியும் வெளியிட வாய்ப்போ, போதிய நிதி வசதியோ இல்லாமல் அல்லற்படும் எழுத்தாளர்களை கைதூக்கிவிட வேண்டிய காலகட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதை உணர்ந்து செயற்திட்டத்தை வகுத்து செயற்பட்டால் எழுத்துத்துறை நிமிரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ●

---

## இசை மண்டபத் திறப்பு விழா

இசைக் கலைஞர் மன்ற மண்டபத் திறப்பு விழா.

நல்லூர் சட்டநாதர் வீதியில் இளங் கலைஞர் மன்ற இசை அரங்கு சமீபத்தில் திறந்து வைக்கப் பெற்றதையடுத்து தொடர்ந்து இரண்டு வாரங்களாகப் பல்வேறு இசைக் கலைஞர்கள் அரங்கில் இசை மழை பொழிந்து சிறப்பித்தனர்.

இசைக் கலைஞர்கள் ஒருங்கு சேர்ந்து தங்களுக்கென ஓர் இசை மண்டபத்தை அமைத்துக் கொண்டது பாராட்டத்தக்கது. அதற்காக முன் நின்று உழைத்த இசை அரசர்கள் பொன். சுந்தரலிங்கம் பத்மலிங்கம், பஞ்சமூர்த்தி ஆகியோரை மல்லிகை மனப் பூர்வமாகப் பாராட்டுகின்றது.

— ஆசிரியர்

# நிழற்போர்

திக்குவல்லை கமால்

காதர் மௌலவி வீட்டி லிருந்து வெளியிறங்கினர்.

சம்பிரதாய மௌலவிகளின் வெளிக்கோலங்கள் அளவுக்கதிக மாக அவரிலே அப்பியிருக்க வில்லை.

மகரகமையில் ஏழு வருடங் களாக ஓதிப் பட்டம் பெற்று வெளியேறி இன்னும் இரண்டு மாதங்கள் கூடப் பூர்த்தியாகி விடவில்லை. சூட்டோடு சூடாக பள்ளிவாசலொன்றைத் தேடி அங்கேயே தஞ்சமென இருந்து விடும் நிலைப்பாட்டிற்கு அப் பால் நின்றார் அவர்.

''மௌலவியா வெளியானா கதீப் வேலதான் செய்யோ ணுமா?'' இப்படி அவர் சர்வ சாதாரணமாகக் கேட்டுவிடு வார்.

''காதர் மௌலவியா எங்கி யன் போற?'' எதிர்ப்பட்ட அவ ரது பால்ய நண்பன் நௌ ஸார் கேட்டான்.

''புள்ளயல் கொஞ்சம்பேரு வரச்செல்லிட்டுப் போன. அது தான் அந்தப் பொக்கத்துக்குப் போற'' மௌலவி சிரித்துக் கொண்டே சொன்னார்.

இன்னும் ஏதேதோ கதைக் கும் ஆவல் அவரது நண்பருக் குள் ததும்பி நின்றது.

''ஏத்தியன் ஒரு மாதிரி பாக்கிய?'' மீண்டும்காதர் மௌல விதான் கேட்டார்.

''ஒண்டுமில்ல மௌலவி... நீங்க இந்த நெலமக்கி வந்தது எனக்கு பெரிய சந்தேஷம். ஒங் களால எங்களுரு பெரோசன மடயோணுமெண்டு எனக்கொ ராச'' நௌஸார் கூட்டு மொத் தமாகத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

''அதச் சொட்டீந்தான் கதீப் வேல மதுரஸா வேல யொன்டேம் பாரமெடுக்காமிக் கிய... இதியளப் பாரமெடுத்தா ரெஸ்டிமார் செல்லியத்துக்கு தளயாட்டியாட்டீக்கோணும்..... ம்... இப்ப ஒத்தருக்கும் நான் பயப்புடத்தேவில்ல. எனக்கு வேண்டியத்தச் செல்யேலும்...''

''ஒங்கட போக்குத்தான் சரி''

இருவருமே மகிழ்ச்சியோடு பிரிந்தனர்.

ஒரு புதிய புத்தகத்துக்கு முன்னுரை எழுதும் தெம்பு அவ ருக்குள் சுடர்விட்டது. சட் டென்று ஏதோ ஞாபகம் வந்த வராக சேட்கையை உயர்த்தி நேரத்தைப் பார்த்து, பத்து மணிக்குப் பத்தே நிமிடங்கள; கதையில் அதிக நேரம் கடந்து விடவில்லைத்தான்.

பள்ளிவாசல் முகப்பு தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. அங்கே அவரது வரவை எதிர் பார்த்து நாலைந்து மாணவர்கள் காத்திருந்தார்கள்.

●

அன்று இஷாத் தொழுகைக்குப் பின்பு தொழுகையாளிகள் பெரும்பாலும் வெளியேறிய நிலையில், ஐந்தேபேர் கொண்ட சிறு வட்டமொன்று ஒரு பக்கமாக ஒதுங்கி அமர்ந்திருந்தார்கள். சில நேரங்களில் பெரிய மனிதர்கள் ஊர்பலாய் கழுவும் இடம் பள்ளிவாசல்தானே!

''காதர் மௌலவிட போக்கு வர வர மோசம். இதுக்கு நாங்க எடமுடப்படாது'' தாவூஸ்லாப் தாப்பை மணிகளை உருட்டியபடி மசூராவை ஆரம்பித்துவைத்தார்.

''மெய்தான் மெய்தான்'' ஆரிப் ஹாஜி நெய்வார்த்தார்.

''கொஞ்சம் படிச்சிக் கொண்டு ஓதிக்கொணு வந்தா இந்தச் சின்னக் குடும்பத்திலீந்து வாரவணியன் பெரிய மனிசனாகத்தான் பாக்கிய...'' தனது தாடியைத் தடவியபடி ஜெலால் நானா அழுத்தம் கொடுத்தது தாளிக்க ஆரம்பித்தார்.

''இத நாங்க உட்டுக்கோ நிண்டா எங்கட தப்லீக் வேல மிச்சந் தூரத்துக்கு மோசமாப் பெய்த்திரும்...'' பெரிய மனக்கக்கிசத்தோடு அழுத்தம் கொடுத்தார் ஐயூப் லெப்பை.

''பெடியன்டார அசடாக்க ரெடியாகியாரு போலீக்கி. நாங்கதானே ஸ்டூடன்ஸ் புரக்ராம் நடத்திய? எங்கட வேலேல இல்லாத ஜாதி எனத்தியனிக்கிய'' மாணவர் நிகழ்ச்சிக்குப் பொறுப்பான தாவூஸ் லாப் மீண்டும் நெய்யூற்றினார்.

''ஞாயமான மெறக்கிச் செல்லிப் பாக்கேம். உட்டுக் குடுத்தா வாயில மண்தான்'' ஐயூப் லெப்பைக்கும் இருப்புக் கொள்ளவில்லை.

எல்லோருடைய உணர்ச்சிப் பிரதிபலிப்புக்களையும் அவ்வளவு நேரமாக அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ரஸின் லாபுக்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சூடேறிக் கொண்டு வந்தது. எல்லோருக்கும் அவர் ஒரு அமீர்போல... பண விஷயத்திலும் குறைச்சலில்லாத பேர்வழி. அதிக நேரம் நேரவில்லை. அவருக்கு ஜெலாபு வந்துவிட்டது.

''இவனியளுக்கு ஞாயமாச் செல்லி வேலல்ல. புதிய புதிய ஜாதிகளைக் கொணுவர எட முட்டா பொடியன்மாரு கெட்டுப்பெய்த்திருவானியள். இதுக்கு முந்திம் இப்பிடி எத்தினயோ பேரு ரெடியாகின. ஆனா இவருக்கு மௌலவியென்ட துணிச்சல் போலீக்கு. நான் நல்ல பாடம் படிப்பிச்சிக் காட்டியன்'' ரஸின்லாப் துணிந்துவிட்டார். இனியென்ன?

முன்னறிவித்தலில்லாத மசூரா வெற்றிகரமாக முடிவுற்ற திருப்தியில் எல்லோரும் எழுந்தார்கள்.

மணிக்கூட்டைப் பார்த்துப் பார்த்திருந்த மோதினப்பா கேற்றைத் மூடத் தயாரானார்.

●

நான்காவது சனிக்கிழமை.

நான்கே பேருடன் ஆரம்பித்த குர்ஆன் விளக்க வகுப்

புக்கு அன்று பதினைந்து பேருக்கு மேல் கூடிநின்றார்கள். எல்லோருமே ஏஎல் ஓஎல் படிக்கும் மாணவர்கள்தான்.

விளக்கங்களைத் தொடர்ந்து இடம் பெறும் கருத்துப் பரிமாறல், சந்தேக நிவர்த்தி என்பன விஷயமுள்ளவர்களை ஈர்த்து வருவதை காதர் மௌலவி நன்கு கவனித்தார்.

அன்று விளக்க வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போதுதான் ரஸின் ஸாபும், ஆரிஃப் ஹாஜியும் அங்கே வந்தார்கள்.

தொழுகை வேளை அல்லாத போது அவர்கள் அங்கே ஏதோ விஷயத்தோடுதான் வந்திருக்கிறார்களென்பது மௌலவிக்குப் புரிந்துவிட்டது.

''மௌலவி... ஏத்தியனிது''

ரஸின்ஸாப் இப்படிக் கேட்டபோது மரியாதைக்காக எழுந்து நின்றார் காதர் மௌலவி.

''ரெணு மூணு கெழமயா நடக்கியெண்டு கேள்வி''

''புள்ளயழுக்கு குர்ஆன் வெளக்க வகுப்பொன்டு நடத்திய'' தாழ்ந்த குரலில் சொன்னார் மௌலவி.

''தப்லிக் வேலயல்லாம் இந்தப் பள்ளில வேறொன்டும் நடத்தியத்துக்கு நாங்க எடம் குடுக்கியல்ல: கொஞ்சம் ஓதிட்டு வந்த ஏன்டுமத்தனம் போலீக்கி. போங்கடா பள்ளியால'' ரஸின் ஸாப் ஐஸூபில் கத்தினார். அவரது 'தொள தொள' உடல் ஒரு கணம் குலுங்கி நின்றது.

''பளார்......''

சற்றுமே எதிர்பார்க்வில்லை. கன்னத்தில் விழுந்த பலத்த அடியினால் காதர் மௌலவி விதிர் விதிர்த்துப் போனார். என்ன பேசுவது செய்வதென்று ஒன்றுமே புரியாமல்... ஆத்திரமும் கவலையும் ஒன்றாய்க் கலந்தன.

''பள்ளி ரெஸ்டீம் அவருதான்... எதுசரி பொய்க் காரணம் காட்டி கொணுபெய்த்துப் பொலிஸில அடச்சால்......''

ஒரு கணம் எதிர்த் தாக்குலலுக்குத் துணிந்து, மறுகணம் இப்படி எண்ணிப் பார்த்து தன்னைச் ஸபூர் படுத்திக் கொண்டு மெல்ல வெளியேறினார் மௌலவி. அவரைத் தொடர்ந்து மாணவர்களும்......

''குர்ஆன் வெளக்கமென்ட பேரில ஜமாதே இஸ்லாமிய கொணுவாரானியள்... இன்னம் கொஞ்ச நாளில மௌலூது ஓதவாண...... மூணு நேரம் தொழுங்கொ... எட்டு ரகாத்து தராபியா...... ஒன்டொன்டா வரும்...'' வெற்றிப் பெரிமிதத்தோடு சுத்தினார் ரஸின்ஷாப்.

●

# 'மேமன் கவி'க்குப் பாராட்டு விழா

ப. ஆப்டீன்

சாகித்திய விழாவில் இலக்கிய விருது, 'இலக்கிய வித்தகர்' பட்டமும் பெற்ற மானுட நேயர் கவிஞர் மேமன் கவி அவர்களுக்கு கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஹோட்டல் தப்ரபேனில் மிகவும் பிரமாண்டமானதொரு பாராட்டு விழாவை நடத்தியது.

1974ம் ஆண்டு 'சுதந்திரன்' பத்திரிகை மூலம் இலக்கி உலகிற் புகுந்த மேமன் கவிக்கு வயது முப்பத்தைந்து.

கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய, நாடறிந்த வானொலி நாடக ஆசிரியர் திரு. எம். அஷ்ரப்கான் அவர்கள் இவருக்கு தமிழ் மொழியின்பால் ஆர்வமூட்டிய ஆசிரியப் பெருந்தகையை இவர் மறப்பதில்லை. அதுபோலவே ஆரம்ப காலத்தில் கவிதைத் துறையில் இவருக்கு உற்சாகம் அளித்தவர் மறைந்த கவிஞர் திரு. ஈழவாணன் அவர்கள் ஆவார்.

மேமன் கவியின் கவிதைகள் நம் நாட்டில் மட்டுமல்ல தமிழகத்திலும், தமிழ் பேசும் வேறு நாடுகளிலும் வாசகப் பெருமக்களை ஈர்த்துள்ளன. யுகராகங்கள், ஹிரோஷிமாவின் ஹீரோக்கள், இயந்திர சூரியன், நாளையை நோக்கிய இன்றில் ஆகிய நான்கு காத்திரமான புதுக்கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்.

1990 ஆம் ஆண்டில் நர்மதா வெளியீடாக வெளியான ''நாளையை நோக்கிய இன்றில்'' என்னும் புதுக்கவிதைத் தொகுதியே அவ்வாண்டு வெளியான சிறந்த புதுக்கவிதைத் தொகுதிக்கான சகித்திய மண்டலப் பரிசு பெற்றதாகும்.

சுய முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் வளர்ச்சியடைந்த கவிஞர் மேமன் கவிக்கு தேசத்தின் மூத்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா, மல்லிகை, பல எழுத்தாளரின் தொடர்பு, நல்ல நண்பர்களின் நட்பு ஆதியன உந்து சக்திகளாக வழிகாட்டி வந்துள்ளன.

மூன்றாம் குறுக்குத் தெருவில் இவரது அலுவலகமும், வியாபார ஸ்தலமும் அமைந்துள்ளது. சற்றும் அமைதியற்ற ஜனரஞ்சகமான இச் சூழலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இலக்கியம் படைக்கும் சாணக்கியம் அலாதியானது. எந்த நேரமும் இவரைச் சுற்றி இலக்கிய நெஞ்சங்களையே காண முடியும். எப்போதும் ஓர் இலக்கியவாதிக்கு ஊன்று கோலாய் இருப்பதுவே இவரது சுபாவம்.

டாக்டரும் கவிஞருமான ஜின்னா செரிபுத்தீன் அவர்கள் தனது கவி வாழ்த்து மூலம் கவிஞனின் இதயத்துள் இழையோடும் மானுட நேயத்தை யதார்த்தமாகப் படம்பிடித்துக் காட்டினார்.

நாவலப்பிட்டி மலையக ஆன்மீக கலை இலக்கியய மன்றத்தின் சார்பில் திரு. கே. பொன்னுத்துரை அவர்கள் 1992ம் ஆண்டிற்குரிய மகாகவி பாரதி விருதை வழங்கினார்.



கேள்வி கேட்பதே ஒரு கலை. அதிலும் புதுப் புதுக் கேள்விகள் கேட்பது அறிவு வளர்ச்சிக்கு உகந்ததாகும். பலராலும் விரும்பிப் படிக்கப்படுவது தூண்டில் பகுதியாகும். எனவே சுவையான, இலக்கியத் தரமான, சிந்திக்கத்தக்கவையான கேள்விகளைக் கேளுங்கள், உங்களுடைய உண்மையான தேடல் முயற்சியை மல்லிகை மூலம் கேட்க முனையுங்கள். ஏனெனில் நானும் தேடல் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகின்றேன். இங்கு உபதேசம் அல்ல நோக்கம். அறிதலே அறிந்து தெரிந்து தெளிந்து கொள்வதே அடிப்படைக் கருத்தாகும். இளந் தலைமுறையினர் இந்தத் களத்தை நன்கு பயன் படுத்தலாம். இதனால் நான் படித்த, சிந்தித்த, அனுபவித்த, உணர்ந்த சகலவற்றையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

*— டொமினிக் ஜீவா*

# தூண்டில்

● *நீங்கள் சமீப காலமாகப் பிரமுகர் வரிசையில் சேர்ந்து கொண்டிருப்பது போலத் தெரிகிறது. எதிர்காலத்தில் ஒரு பிரமுகராக வரும் நோக்கம் ஏதேனும் உண்டா?*

மானிப்பாய், **ச. ஸ்ரீதரன்**

எந்தக் காலத்திலுமே எனக்கு அந்த நோக்கம் கிஞ்சித்தும் இருந்ததில்லை. நான் எழுத்தாளன், மல்லிகை ஆசிரியன் என்ற பெருமையைப் போற்றிப் பாதுகாக்கவே முனைந்து உழைத்து வருகின்றேன். சமூகம் என்னையும் ஒரு பிரமுகர் எனக் கருதிக் கொண்டால் நானதற்கு என்ன செய்வது?

● இலக்கியம் என்பது மக்களுக்காகவே படைக்கப்படுவது. மக்களுக்காகவே படைக்கப்படவும் வேண்டும். அப்படியானால் இலக்கியங்கள் மக்களுக்கு விளங்கக் கூடியவாறு எளிமையாகக் காணப்பட வேண்டும். அதை விடுத்து சில கடினமாக இருப்பதற்குக் காரணம் யாது?

**சு. மணிசேகரன்**

அக்கரப்பந்தனை.

இலக்கியம் என்பது யாருக்கும் சுலபமாக விளங்கக் கூடாது. அப்படி விளங்கிவிட்டால் அது உயர்தரமாக இருக்காது என்பது பழைய பண்டிதப் பஞ்சாங்கங்களின் கருத்து. இது மக்கள் யுகம். புரிவது மாத்திரமல்ல, மக்களின் பிரச்சினைகளை உள்ளடக்கமாகவும் கொண்டதாக அவை அமைய வேண்டும். சில

புதுக்கவிதைகளைப் படிக்கும் போது எனக்கும் இதே சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. திரும்பவும் படித்துப் பார்ப்பேன். விளங்கவில்லையோ அதை அப்படியே தூக்கி ஒரு பக்கம் வைத்துவிட்டு எனது மிச்ச வேலைகளைக் கவனிக்க முற்பட்டு விடுவேன்.

● செவ்வி காண்பது ஒரு சிறந்த இலக்கிய அம்சம். ஆரோக்கியமான அம்சம் கூட. செறிவான பல பயன்களை அதன் மூலம் அடையலாம். மல்லிகை அதைப் பின் பற்றினால் என்ன?

மட்டுவில், சி. சதாசிவம்

நல்ல ஆலோசனை. நேர் காணல் என்பதன் மூலம் ஒரு படைப்பாளியின் ஆத்ம தாகத்தைப் புரிந்து கொள்ளலாம். அது பலருக்குப் பயன் படத்தக்கவை. 'சுப மங்களா' இந்த நேர் காணல் மூலம் பல எழுத்தாளர்களை அணுகி, பல்வேறு இலக்கியக் கருத்தோட்டங்களுக்கு மேடை சமைத்துத் தந்து வருகின்றது. இந்த நேர்காணலில் ஒரு சிக்கல். பேட்டி காண்பவர் படைப்பாளியின் தகைமை அறிந்து நுட்ப திட்பத்துடன் கேள்வி கேட்டுப் பதில் பெறத் தக்கவராகவும் அமைய வேண்டியது மிக மிக முக்கியம். கூடிய வரை இதை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றேன்.

● சமீப காலமாக யாழ்ப்பாணத்தில் பல புதிய சஞ்சிகைகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இவற்றால் மல்லிகையின் விற்பனையில் பாதிப்பு ஏதும் உண்டா?

கொழும்புத்துறை,

தே. முகுந்தன்

மல்லிகை விற்பனைக்காக மாத்திரமல்ல, என்னையும் மல்லிகையையும் ஆழமாக நேசிக்கும் ஆத்மார்த்திகமான நண்பர்களுக்காக ஆரம்பிக்கப் பெற்ற இதழாகும். மல்லிகையின் சந்தாதாரர்களே மல்லிகைக்குப் போதும். மற்றும் இங்கு வெளிவரும் இதழ்கள் ஒவ்வொன்றுமே தனித்துவம் பெற்ற இதழ்களாகும். ஒன்றை வாங்கும் ஆர்வலர் மற்றதையும் வாங்கி வாசிப்பார்கள். இன்னும் நிறைய இதழ்கள் வெளிவரவில்லையே என்பதுதான் எனது மன ஆதங்கமாகும்.

● சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தீர்கள், காலையில் ஒருவர் வருவார் பத்து ரூபாவும் கோயில் பிரசாதமும் தட்சணையாகத் தந்துவிட்டு வாழ்த்திப் போவார் எனக் குறிப்பிட்டிருந்தீர்களே, அவரைப் பற்றி முழு விவரமும் சொல்ல முடியுமா?

கோப்பாய், ச. தவேந்திரன்

இதய பூர்வமாக என்னை நேசிக்கும் இதயங்கள் இதை விரும்பமாட்டா. காரணம் இது விளம்பரத்துக்குரியதல்ல. மேற்கொண்டு தகவல் தர இயலாது. நேரடியாகத் தெளிவு பெற வேண்டுமானால் காலை எட்டு மணிக்கு மல்லிகைக்கு வந்தால் நேரில் அந்தக் காட்சியைப் பார்க்கலாம்.

● படைப்பாளி ஒருவன் சிருஷ்டிகளை விமர்சனத் துறையில் விமர்சிக்கும் போது படைப்பிலக்கியமும் விமர்சனத் துறையும் வளர்ச்சியடையலாம்தானே?

கெருடாவில் எஸ். குணேஸ்வரன்

படைப்பும் விமரிசனமும் இருவேறு துறைகள். ஒன்றை ஒன்று சார்ந்ததாக இருந்தாலும் இரண்டுமே வேறு அளவு கோல்களைக் கொண்டதாகும். இந்த மண்ணில் இரண்டிற்கும் அர்த்

தம் தெரியாமலே நடந்தேறி வருகின்றது.

◉ ராமன் வாலியை மரத்திற்குப் பின்னால் நின்று கொன்றது தவறுதானே?

இயக்கச்சி, ப. வெற்றிவேல்

மகாபெரிய தவறு. ராமன் கம்பன் கூற்றுப்படி அவதாரம். அப்படியான அவதார ராமன் இப்படியாகப் போர் நீதியை மீறி ஒழுங்கீனமாக நடந்து கொண்டது மிகப் பெரிய அநீதி. இதில் கம்பன் என்ற கலைஞன் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றை ஒத்துக் கொள்ளுகின்றான். ஒரு தாயின் கருப்பையில் இருந்து ஜெனித்து இந்த மண்ணில கால் பதித்து வாழ்ந்த மனிதன் எத்தனைதான் உயர்ந்தவனாக உருவாகிய போதிலும்—கல்யாண குணங் குறிகளை உடையவனாக இருந்த போதிலும்—மனிதனாக அவதரித்த போதே மனிதக் குணங்களுக்குள்ளும் ஆட்பட்டு விடுவது இயற்கை நியதி. கம்பன் காட்டிய ராமனிடம் இந்த மனிதப் பலவீனமும் இருந்ததுண்டு என்பனதக் காட்டுவதே வாலிவதைப் படலமாகும். இதைக் கம்பன் விரும்பிச் செய்தானோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் கம்பனின் ராம பக்தியையும் மீறின மனித நோக்கு இதில் இடம் பெற்று விட்டது என்றே நான் கருதுகின்றேன்.

◉ முன்னர் நீங்கள் கொழும்பு வருவீர்கள். இலக்கியக் கூட்டங்களில் எல்லாம் கலந்து கொள்வீர்கள். இப்பொழுது நீண்ட காலமாக உங்களை இங்கு முடியவில்லையே, வந்தால் என்ன?

கொழும்பு - 9,

எஸ். முகம்மட் கான்

முன்னர் மாதம் ஒரு தடவை வருவேன். கடந்த ஆறு மாதங் களாக வர இயலவில்லை. பிரயாணச் சிரமம்தான் அடிப்படைக் காரணம். அத்துடன் போய் வர ஏற்படும் அசாதாரணமான பிரயாணச் செலவு. வந்து இலக்கிய நண்பர்களை யெல்லாம் பார்த்துப் பேசத்தான் ஆசை. கூடிய சீக்கிரம் வரத் தெண்டிக்கின்றேன்.

◉ மல்லிகையின் ஒவ்வொரு இதழையும் பார்க்கும்போது எனக்குள் ஆச்சரியப்படுவதுண்டு. இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் உங்களால் எப்படி மல்லிகையை வெளிக் கொண்டு வர முடிகிறது? இந்த விலைக்கு எப்படிக் கட்டுபடியாகிறது?

சங்கானை, அ. மகேந்திரன்

இந்தக் கேள்வியையே பல கோணங்களில் பலர் கேட்கின்றனர். எக்கச் சக்கமான நெருக்கடி நோங்களில் மனசைக் குலைய விடாமல் எடுத்த காரியத்தை ஒப்பேற்றி விடுவதுதான் விவேகமான செயல். அதையே நான் செய்து வருகின்றேன். மல்லிகையின் அடக்க விலை அதிகம். அந்தப் பளுவை சுவைஞர் தோளில் ஏற்றுவதில்லை. தவிர்ப்பவர்கள் மல்லிகையை மனசார நேசிக்கும் நண்பர்களே. அவர்கள் மூன்றாம் பேர்களுக்கும் தெரியாமல் தங்களால் இயன்றதை உதவுகின்றனர். நான் என்னை அர்ப்பணித்து உழைக்கின்றேன். மல்லிகை வெறும் மாசிகை மாத்திரமல்ல, அது ஜீவனும் துடிப்பும் இதய நேசிப்பும் இந்த மண்ணைச் செழுமைப்படுத்த வேண்டும் என்ற பேரவாவும் கொண்ட தனிப் பெரும் சாதனமுமாகும்.

◉ மேடைகளில் சிலவற்றில் பார்த்திருக்கிறேன், நிகழ்ச்

கிகளில் கலந்து கொள்ளும் பிர முகர்களைக் கௌரவிப்பதற்காக மலர் மாலை அணிவிப்பார்கள். சிலர் அதை ஏற்றுக் கொள்ளாதது போல நடித்துப் பின் வாங்குவார்கள். மற்றும் சிலர் போட்ட உடனேயே மாலையைக் கழற்றிவிடுவார்கள். எனக்கு இதைப் பார்க்கும்போது எரிச்சலாக வரும். இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

உரும்பிராய், க. தேவராசா

நீங்கள் குறிப்பிடும் இந்தச் சம்பவத்தை நானும் அடிக்கடி பார்த்திருக்கின்றேன். ஏதோ தாங்கள் புகழுக்கு விருப்பமில்லாதவர்கள் என்பதைக் காட்டுவது போல, சிலர் மாலையை நிராகரிப்பது போல நடித்துப் பின் வாங்குவார்கள். இது ஒரு வகை நடிப்பு. மக்கள் மத்தியில் பிரபலம் தேவை என்பதற்காகத் தானே மேடைக்கே வந்திருக்கிறார்கள். பின் ஏன் பின்னடிப்பு? வீட்டில் இருந்துவிடலாமே! அடுத்து, உடனே மாலையைக் கழற்றி விடுபவர்கள் பற்றியது. அன்பாக உபசரிப்பதற்கு ஓர் அடையாளம்தான் மலர் மாலை. அதை உடன் அகற்றுவதும் பண்பாடல்ல. இது எனது அபிப்பிராயம்.

மாலை அணிவிக்கும் பழக்கத்தால் மூன்று குடும்பங்களின் வீட்டில் அடுப்பெரியும். பூப் பறிக்கும் குடும்பம்; மாலை தொடுப்போர் குடும்பம்; பூமாலை விற்பவர்களின் குடும்பம் ஆகிய மூன்று குடும்பங்கள் அத்துடன் சிறு சிறு நந்தவனங்களும் உருவாகின்றன. இதை நாம் புரிந்து கொண்டால் மாலையை ஏற்றுக் கொள்வது கூட ஒரு சமூகத் தொண்டு என்பதை விளங்கிக் கொள்பவர்களாவோம்.

● சில சமயங்களில் உங்களுக்கு வாழ்க்கையில் விரக்தி தலை காட்டுவதுண்டா? அந்தச் சமயத்தில் அதைப் போக்க என்ன செய்கிறீர்கள்?

உடுவில், ஆர். மனோகரன்

உண்மையைச் சொல்லுகின்றேன். எனக்கு எந்தக் காலத்திலுமே மனசு விரக்திப்பட்டதில்லை. காரணம் சதா வேலை செய்வதில் அதிக மகிழ்ச்சி அடைபவன் நான். எனவே பல சோலிகளைத் தலையில் சுமந்து திரிபவன். வாழ்க்கையில் பிடிப்பும் நம்பிக்கையும் அற்றவர்களைத் தான் இந்த நோய் பீடிக்கும். வாழ்க்கையை நான் நேசிக்கின்றேன்; அதனுடன் போராடுகின்றேன்; கொஞ்சுகின்றேன். இது தான் எனது வாழ்வின் தத்துவம்.

● நான் எழுத்தாளனாக விரும்புகிறேன். அதற்கு உங்களது உபதேசம் என்ன?

கோண்டாவில், ப. கணணன்

யாருடைய உபதேசத்தையும் கேட்காதீர்கள். நீங்கள் உங்களை அர்ப்பணித்து உழைத்து வாருங்கள்; படியுங்கள்: சிந்தியுங்கள்; புதுமையாக எழுதுங்கள். வேர் பாய்ச்சி வளரலாம். ●

---

**இச் சஞ்சிகை 234 பி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும், வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களினால் 'மல்லிகைப் பந்தல்' அச்சகத்தில் அச்சிடப் பெற்றது. அட்டை: யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.**

# ESTATE SUPPLIERS
# COMMISSION AGENTS

VARIETIES OF
CONSUMER GOODS
OILMAN GOODS
TIN FOODS
GRAINS

THE EARLIEST SUPPLIERS
FOR ALL YOUR

# NEEDS

**Wholesale & Retail**

**Dial: 26587**

*TO*

# E. SITTAMPALAM & SONS.

*223, FIFTH CROSS STREET,*
*COLOMBO-11.*

**Mallikai** Registered as a News Paper at G. P. O. Sri Lanka

Q. D. 45 NEWS - 93

Dealers in:

**Timber Plywood & Kempas**



With Best Compliments of:

# STAT LANKA

**COLOMBO-12.**